Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 தை – 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 07 (18.01.2005) செவ்வாய்க்கிழமை இதழ்: 110

### தமிழ்ப் புத்திஜீவிகளைச் சந்தித்து

# தாயக மீள் கட்டுமானம் தொடர்பாக தலைவர் பிரபா முக்கிய ஆலோசனை!



(கிளிநொச்சி)

**சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தை மீளக் கட்டியெழுப்ப முன் வந்துள்ள புத்திஜீவிகளுடன் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார்.**

**கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், முக்கிய பிர முகர் வே.பாலகுமாரன், கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் உள்ளிட்ட விடு தலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் புத்திஜீவிகளும் கலந்துகொண்டனர்.**

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பல்வேறு நாடு களில் இருந்து வந்திருந்த தமிழ்ப் புத்திஜீவிகளை வரவேற்று அனர்த்த நெருக்கடியின் பின் உடனடி யாக தாயகத்து மக்களுக்காக நாட்டுக்குத் திரும்பி வந்து இரவு பகலாகப் பணியாற்றிக்கொண்டிருக் கும் அவர்களை பாராட்டிய தேசியத் தலைவர் வே. பிரபாகரன் எமது தேசம் இந்த அனர்த்தத்தின் விளைவிலிருந்து விரைவாக விடுபட எல்லா வளங் களும் ஒருங்கிணைக்கப்படவேண்டும் என வலி யுறுத்திக் கேட்டுக்கொண்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் அமெரிக்கப்படை நீண்ட காலம் தங்கமாட்டாது!

## துணைப் பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உதவிப் பணிகளில் ஈடுபட் டுள்ள அமெரிக்க மரையின் படையினர் நீண்ட காலத்துக்கு இங்கு தங்கமாட்டார்களென அமெரிக்க பிரதிப் பாதுகாப்புச் செயலர் போல் வூல்ப்பிட்ஸ் தெரிவித்தார்.

குறுகியகால விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் கொழும்பு வந்த வூல்ப்பிட்ஸ் மற்றும் பசுபிக் பிராந்திய தளபதி அட்மிரல் தொமஸ் பார்கோ இருவரும் சுனாமியால் அழிவுக்குள் ளான காலிப் பகுதியில் அமெரிக்கப் படை யினர் மேற்கொண்டுவருவம் மீட்புப் பணிகளை சென்று பார்வையிட்டனர். இதன்பின்னர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது -

இலங்கையில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மீள் கட்டு மானம் தாமதமின்றி நடைபெற்று வருகின் றது.

700 இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படை யினர் இலங்கையில் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் அநேகமானவர்கள் பொறியியலாளராவார். இலங்கைக்கு உதவி வழங்கவந்த இரண்டு கப்பல்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாலைதீவுக்குச் சென்றுள்ளன.

அமெரிக்க இராணுவத்தினர் எவ்வித யுத்த நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டார்கள். எந்த நாட்டு இராணுவமும் தொடர்ந்து புனர



மைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை (12 ஆம் பக்கம் பார்க்க)

### சுனாமி அனர்த்தத்தில்

## உயிரிழந்தோர் தொகை 38 ஆயிரமாக அதிகரிப்பு!

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் இலங்கை யில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் 7 ஆயிரத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம் பெற்ற இந்த அனர்த்தத்தால் உயிரிழந் தோரின் சடலங்கள் இன்னமும் மீட்கப்பட்டு வருவதையடுத்தே - திடீரென உயிரிழந்தோர் தொகை 7 ஆயிரம் பேரால் அதிகரித்துள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இலங்கையில் சுனாமியால் உயிரிழந் தோர் தொகை 30 ஆயிரத்து 920 பேர் என அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சடலங்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருவதை அடுத்து இந்தத் தொகை 38 ஆயிரத்து 195 பேராக உயர்ந்துள்ளது.

மேலும் தொடர்ந்து சடலங்கள் எடுக்கப் பட்டுவரும் நிலையில் உயிரிழந்தோர் தொகை 40 ஆயிரத்தை எட்டலாம் என்றும் அதிகாரி கள் தெரிவித்தனர்.

இதேவேளை சுனாமியின் பின்னர் 6 ஆயி ரத்து 20 பொதுமக்கள் காணமற்போயிருப் பது குறிப்பிடத்தக்கது.

## வட பகுதிக்கு வராமலேயே கனடிய பிரதமர் திரும்பினார்!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாக நேரில் வந்து பார்வையிடுமாறு பல்வேறு தரப்பினரும் விடுத்த கோரிக்கை களைப் பிரதமர் போல் மாட்டின் கவனத்தில் எடுக்காமல் தனது இரண்டு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டார்.

நேற்று முன்தினம் கொழும்புக்குவந்த கனடியப் பிரதமர் போல் மாட்டின் நேற்று கல்முனைக்கு விஜயம்செய்து சுனாமி யால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீட்புப்பணிகளில் ஈடுபட் டிருக்கும் கனடிய உதவிக் குழுக்களைப் பார்வையிட்டார்.

கல்முனையில் இருந்த நலன்புரி முகாம்களுக்கும் சென்று அங்கு தங்கியுள்ள மக்களின் நலன் குறித்தும் இவர் விசாரித் தார்.

இதன் பின்னர் கொழும்புக்கு திரும்பிய கனடியப் பிரதமர், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கே.பி.றெஜி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

### கனடாவில் நடந்த கொலை

## மேலும் இரு இளைஞர்களை பொலிஸார் தேடுகின்றனர்!

(கொழும்பு)

கனடாவின் ரொரன்ரோ மானிலத்தில் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இனந்தெரியாதநபர்களால் கோண்டாவிலைச் சேர்ந்த தனுஷன் ஜெயக்குமார் என்ற இளைஞர் குத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைத் தாம் அடையாளம் கண்டுள்ளதாக ரொரன்ரோ பொலிஸார் தெரிவித்தனர்.

றொகான் சார்லஸ் ஜோர்ஜ் (வயது19) மற்றும் மார்க்கன் அல்லது புருஷோத்தமன் நடராஜா (வயது 21) ஆகிய இருவருமே இச் செயலுடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் ஆனால், இவர்கள் கைது செய்யப் படவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவரது கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகன மும் அடையாளம் காணப்பட்டுள்ளது. கடும் நீல நிறத்தையு டைய 1989 ரொயாட்டா கம்றி வாகனம் இதுவென பொலிஸார் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்!

### கனடியப் பிரதமர் வேண்டுகோள்

(கொழும்பு)



இலங்கை அரசாங்கத் துக்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முன்னெடுத் துச் செல்லப்பட வேண்டும் என கனடியப் பிரதமர் போல் மாட்டின் தெரிவித் தார்.

இலங்கைக்கான இரண்டு நாள் விஜயத்தின் முடிவில் நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது -

தேசத்தைக் கட்டியெழுப்பும் இலங்கையின் திட்டங்க (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# யாழ். பல்கலைக்கழக பொங்குதமிழ் நிகழ்வுகளிலிருந்து...




## மானிப்பாய் இந்துக் கல்லூரி

# அதிபரின் இடமாற்றத்தைக் கண்டித்து மாணவர்கள் பாடசாலை முன் மறியல்!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவரை மீண்டும் அதிபராக நியமிக்குமாறு கோரியும் - சிரேஷ்ட மாணவர்கள் நேற்றுப் பாடசாலையின் பிரதான வாயிலை மூடி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் பாடசாலைக்கு வந்திருந்த ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் உள்ளே நுழைய முடியாமல் வீதிகளில் காத்துநின்றனர்.

இந்தக் கல்லூரியின் அதிபராக நீண்டகாலமாக கடமையாற்றிவரும் சண்முகநாதன் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த சிரேஷ்ட மாணவர்கள் நேற்றுக் காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர், கல்லூரியின் பிரதான நுழைவாயிலை மூடி - ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்களைப் பாடசாலைக்குள் செல்லவிடாது தடுத்து நிறுத்தினர்.

சிரேஷ்ட மாணவர்களின் இந்த நடவடிக்கையைக் கண்டித்த பெற்றோர்களும், பழைய மாணவர்கள் சிலரும் - மாணவர்களையும், ஆசிரியர்களையும் உட்செல்ல அனுமதிக்குமாறு கோரினர். இதனால் சிரேஷ்ட மாணவர்களுக்கும் பெற்றோர்கள் சிலருக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டு முறுகல் நிலை தோன்றியது.

இதனையடுத்து தமிழீழ கல்விக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையை சுமுகமாகத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார். அங்கு கூடியிருந்த சிரேஷ்ட மாணவ பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடியதுடன், மாணவர்களை அங்கிருந்து அமைதியாகச் செல்லுமாறும் மாணவர்களுடைய மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கையை எடுப்பதாகவும் தெரிவித்தார். இதனையடுத்து மாணவர்கள் வீடுகளுக்கு திரும்பினர்.

இதன்பின்னர் அங்கு நின்றிருநத ஆசிரியர்களை சந்தித்து மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கலந்துரையாடினார். பாடசாலைக்கு எந்த அதிபரை நியமித்தாலும் தாம் அவருக்குக் கீழ் கடமையாற்ற தயாராக இருப்பதாக இந்தச் சந்திப்பின்போது கலந்துகொண்ட ஆசிரியர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை, கல்வித் திணைக்கள அதிகாரிகள் எவரும் இந்தப் பிரச்சினையில் தலையிட முன்வராததைக் கண்டித்த கல்விக்கழகப் பொறுப்பாளர், மாணவர்களின் இந்தச் செயற்பாடு எல்லை மீறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக இன்று காலை 10 மணிக்கு, கல்லூரி மண்டபத்தில் பெற்றோர்களுடனான சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(101)

## பிரதேச செயலகத்தில் விசேட கருமபீடம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில், சுனாமி அனர்த்த நிலைமைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கான விசேட கருமபீடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பதிவுகள் மேற்கொள்ளல், நிவாரணம் பெறுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் எவையேனுமிருப்பின் இந்தக் கருமபீடத்தில் சென்று அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் அலுவலரிடம் தெரிவித்து முறைப்பாட்டுப் புத்தகத்தில் பதிவினை மேற்கொள்ளும்படி பொதுமக்களுக்கு பிரதேச செயலகம் அறிவித்தல் விடுத்துள்ளது. (14)

## புனித செபஸ்தியாரின் நவநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்கரை வீதி, புனிதர் செபஸ்தியார் ஆலய நவநாள் கொண்டாட்டம் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

தினமும் மாலை 5:15 மணிக்கு செபமாலையுடன் தொடங்கி பிரசங்கம், வழிபாட்டு நிகழ்வுகளுடன் சொரூப ஆசீர்வாதம் வழங்கல் இடம்பெறும்.

நாளை மாலை 5:15 மணிக்கு நற்கருணை விழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல், கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 5 மணிக்கு திருச்சொரூப பவனி நடைபெற்று இறுதியாக சொரூப ஆசீர்வாதத்துடன் வருடாந்த கொண்டாட்டங்கள் நிறைவடையும்.. (206)

## கண்ணப்ப நாயனார் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி இந்து மன்றம் நடாத்திவரும் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை வரிசையில் - எதிர்வரும் சனிக்கிழமை காலை கல்லூரியிலுள்ள சோமஸ்கந்தர் ஆலயத்தில் கண்ணப்ப நாயனார் குருபூசை இடம்பெறவுள்ளது.

இங்கு இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து, கூட்டுப் பிரார்த்தனை மற்றும் சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் இடம் பெறும்.


மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அரிவாட்ட நாயனார் குருபூசையும் இடம்பெறவுள்ளது.

பதவி வெற்றிடம்
தொலைத்தொடர்பு நிலையத்திற்கு கணனி வேலை செய்யக்கூடியவர்களும், தொலைபேசி இயக்குநரும் தேவை
(இருபாலாரும்)
தொடர்பு: G.M.K. Communication
302, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 222 3760, 4591194.
(3746)















# சர்வதேச உதவிகளை சமமாகப் பகிரவேண்டும்!

## கூட்டமைப்பு எம்.பிக்கள் வலியுறுத்து





(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்கள் இராணுவத்தினரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டமை மற்றும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உதவிகள் சமமாக வழங்கப்படாமை போன்ற விடயங்கள் தொடர்பாக - தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் டடா ஓசினோவை சந்தித்துக் கலந்துரையாடியபோது அவருக்குத் தெரியப்படுத்தினர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பினர், ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவருக்கு மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள் தொடர்பாக இலங்கை அரசின் தற்போதைய செயற்பாடுகள் ஜனநாயகத் தன்மையை பிரதிபலிப்பதாக இல்லை.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற போரால் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். அவர்களுக்கான மீள்குடியமர்வு, புனர்வாழ்வு என்பன தற்போதைய 3 வருட போர்நிறுத்த காலத்திலும் ஏற்படுத்தப்படவில்லை. இந்த மக்களே தற்போதைய சுனாமி பேரனர்த்தத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுனாமி பேரழிவால் பெருமளவில் மீனவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் யுத்த காலத்திலும் தமது தொழிலை சுதந்திரமாகச் செய்ய அனுமதிக்கப்படவில்லை. தற்போதைய போர்நிறுத்த காலத்திலும் அனுமதிக்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு பகுதியானது மூன்றில் இரண்டு பகுதி கடற்கரையைக் கொண்டுள்ள பிரதேசமாகும். இந்தப் பகுதியே சுனாமியால் பேரழிவைச் சந்தித்துள்ளது. எனவே இப்பகுதி மக்களுக்கான உதவிகளை வழங்குவது முக்கியமானதாகும்.

எமது கடந்தகால அனுபவங்களின்படி அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே சர்வதேச சமூகம் குறிப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச உதவிப்பணிகள் விநியோகத்தை சமமாக பகிரப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் உதவிப் பணிகள், மீள்குடியமர்வு, மீள்கட்டுமானம், அபிவிருத்தி என்பன அமுல்படுத்துவது அரசின் மத்திய பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் விடுதலைப் புலிகளும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நலன்புரி நிலையங்கள் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தப் படையினர் நூறு வீதம் சிங்களவர்களாவர். கடந்த 20 வருட காலத்தில் தமிழர்கள் இவர்கள் மூலம் பெற்ற அனுபவங்கள் எண்ணிலடங்காதவை.

அரசின் பங்காளிக் கட்சியாகவுள்ள ஜே.வி.பியின் அறிக்கையானது கடந்த 9 ஆம் திகதி வந்த ஐ.நா. செயலருக்குக் கூடத் தெரிய எனத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆசிய அபிவிருத்திவங்கி சார்பில் அதன் தலைவர் டடா ஓசீனோ தலைமையில் அவரது பிரதம ஆலோ சகர் கன்சாகி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென்னாசியப் பணிப்பாளர் சென்கா, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி அலஸான்ரோ பியோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

### பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாவை கொடுப்பனவாக வழங்குவதற்கும், பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு தமது தொழில்களை முன்னெடுத்துச் செல்ல கடன்கள் வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட சகலருக்கும் பிரதேச செயலாளர்கள் மூலம் கடிதம் வழங்கப்படும். அந்தக் கடிதத்தை அருகிலுள்ள மக்கள் வங்கியொன்றில் கொடுத்து, இந்தத் தொகையை உடனடியாகப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளுக்கு ஆயுதங்கள் வர வாய்ப்புள்ளதாம்

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் நிவாரண உதவிகள் தொடர்பில் சுங்கப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை காரணமாக பாதுகாப்புப் பிரச்சினை எழுந்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் நிவாரண உதவிகள் அனைத்தும் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை.

எனவே இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இவற்றின் மூலம் ஆயுதங்களும், நவீன தொலைத்தொடர்பு கருவிகளும் கிடைக்கும் வாய்ப்பிருப்பதாக இராணுவத்தரப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்புப் படையினரின் இந்தக் குற்றச்சாட்டானது வடக்கு - கிழக்குக்கு நேரடியாக வரும் உதவிகளைக் குறைக்கும் நடவடிக்கையாகவே அமைந்துள்ளதாக தமிழ்த் தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# அரசு, புலிகளின் அறிக்கைகள் கூட்டாகப் பரிசீலிக்கப்படுமாம்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி தகவல்

(கொழும்பு)

புனர் நிர்மாண வேலைகளுக்கான நிதியுதவி வழங்குவதற்கு முன்னோடியாக இலங்கை அரசினாலும் புலிகளினாலும் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் கூட்டாக பரிசீலிக்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த வங்கியின் இயக்குநர் அலஸான்ரோ பியோ ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் மேற்கொண்ட சந்திப்பில் விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் தேவையான உதவிகள் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்வதில் அக்கறை செலுத்தியிருந்தனர்.

இதனால் நாங்கள் பாதிக்கப்பட்ட எல்லோரது தேவைகளையும் ஆராய்ந்து வருகிறோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தோனேஷியா, மாலைதீவு மற்றும் இலங்கைக்கு 675 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முடிவெடுத்திருக்கின்றது.

இந்தத் தொகையில் 500 மில்லியன் டொலர்கள் நன்கொடை பணமெனவும், மிகுதி 175 மில்லியன் டொலர்களில் வேறு திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையை இந்தப் பேரழிவின் நிவாரணப் பணிகளுக்கு பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட 175 மில்லியனில், 50-60 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# எழிலன் மீதான இராணுவத்தின் கெடுபிடிக்கு திருமலை தமிழ் மக்கள் பேரவை கண்டனம்!

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனிடம் இராணுவம் நடத்திய கெடுபிடி சோதனைகளுக்கு திருமலை தமிழ் மக்கள் பேரவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

திருகோணமலை - கட்டைப்பறிச்சான் மகிந்தபுரம் இராணுவ முகாம்களில் நிலை கொண்டுள்ள படையினர் எழிலனின் வாகனத்தை தொடர்ந்து நிறுத்தி மன உளைச்சல் ஏற்படும் விதத்தில் கெடுபிடியாக நடந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் என்று தெரிந்திருந்தும் திட்டமிட்டு இச்செயலை தொடர்ந்து நடத்துவதானது சமாதானத்துக்கு எதிரான செயற்பாடாகவே கருதுகிறோம்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மேற்குறிப்பிடப்பட்ட இராணுவ முகாமில் மட்டும் இவ்வாறான செயலைச் செய்பவர்கள் இனங்காணப்படுவது மிகவும் இலகுவானது.

எனவே, இராணுவத் தளபதி இந்த இராணுவ முகாம்களில் உள்ளவர்கள் மீது உடனடி விசாரணை மேற்கொள்ள வேண்டும். இனிமேலாவது இவ்வாறான சமாதானத்துக்கெதிரான செயற்பாடுகள் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மீது நடத்தப்படும் திட்டமிட்ட விஷமத்தனமான இந்த நடவடிக்கை திருகோணமலை மாவட்டத்தின் சகல தமிழ் மக்களுக்கும் எதிரான நடவடிக்கையாகவே கருதுகிறோம் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (04)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கனடிய குடிவரவு அதிகாரிகள் அனுப்பப்படுவர்

## கனடிய அமைச்சர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கனடிய குடிவரவு அதிகாரிகள் குழுவொன்று அனுப்பப்படவுள்ளது என்றும், அவர்கள் புலிகளின் பிரதேசத்துக்கு செல்வதை அரசாங்கம் தடுக்க முற்பட்டால் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கும் நிலை இலங்கை அரசுக்கு ஏற்படும் என்றும், கனடிய குடிவரவு அமைச்சின் எண் அமைச்சரான யூட் சுக்ரோ இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவில் வாழும் தமிழர்களின் உறவினர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்த அவர் - குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் குழு அந்தப் பிரதேசத்துக்கு செல்ல இலங்கை அரசின் அனுமதி தேவையில்லை எனவும் குறிப்பிட்டார்.

இந்தக் குழுவை புலிகளின் பிரதேசத்துக்கு அனுப்புவது தொடர்பாக கனடிய அமைச்சரவைக்கு பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடும் எதிர்பார்ப்புடன் கனடிய பிரதமர் போல் மார்ட்டின் உட்பட தூதுக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

# கடற்படையின் தளங்களை இந்தியா புனரமைக்குமாம்!

## கொழும்புப் பத்திரிகை செய்தி

கடற்கொந்தளிப்பினால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பாரிய சேதங்களைச் சந்தித்துள்ள கடற்படையினரின் துறைமுகங்களை புனரமைத்து வழங்க இந்தியா முன்வந்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள துறைமுகங்களில் 42 கி.மீற்றர் நீளமான பகுதிகள் இந்திய கடற்படையினரால் புனரமைக்கப்படும் .

இந்தப் புனரமைப்பு பணிகளுக்காக இந்திய கடற்படை ஏற்கனவே இதற்குத் தேவையான உபகரணங்களைக் கொண்டுவந்துள்ளது. இந்தப் புனரமைப்பு பணிக்குள் கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள இலங்கைக் கடற்படையினரின் காவலரண்களும் அடங்குமென அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனாலும் இது தொடர்பாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சோ அல்லது இந்திய நிர்வாகமோ எவ்வித கருத்தையும் உடனடியாகத் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 39 அரச கட்டடங்கள் சேதம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட கடற்கொந்தளிப்பின் போது 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் - 39 அரச கட்டடங்களும், 59 தனியார் நிறுவனங்களின் கட்டடங்களும் சேதமடைந்தன.

இவற்றுக்குப் புறம்பாக 5,974 வீடுகள் முழுமையாகவும், 10 ஆயிரத்து 404 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்திருப்பதாக மாவட்ட அரசாங்க செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (01)

# முதல் இனிங்ஸில் 419 ஓட்டங்களுக்குள் தென்னாபிரிக்க அணி ஆட்டமிழந்தது!



(ஜொகனஸ்பேர்க்)

ஜொகனஸ்பேர்க்கில் நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்க அணி 419 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததை அடுத்து, இங்கிலாந்து அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடி 5 விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 306 ஓட்டங்கள் பெற்ற நிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி நான்காம்நாள் ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடியது.

ஆட்டம் தொடங்கியதுமே பொலக் டக் அவுட்டானார். இவரது விக்கெட்டை எல்.பி. டபிள்யூ முறையில் ஹொகாட் வீழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து போயே மைதானத்துக்குள் நுழைந்தார். கிப்ஸ் - போயே ஜோடி அபாரமாக ஆடி ஓட்டங்களை எடுத்தது. ஸ்கோர் 358 ஐத் தொட்டபோது - கிப்ஸின் விக்கெட்டை அண்டர்சன் கைப்பற்றினார்.

கிப்ஸ் 307 பந்துகளைச் சந்தித்து 25 பவுண்டரிகளுடன் 161 ஓட்டங்களை எடுத்திருந்தார். அடுத்துவந்த என்ரினி - போயே ஜோடியும் பொறுப்புணர்வுடன் ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்தியது.

இவர்கள் இணைப்பாட்டமாக 41 ஓட்டங்கள் பெற்றனர். 80 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்களைப் பெற்றநிலையில் போயே ரன் அவுட்டான நிலையில் ஸ்ரெய்ன் களமிறங்கினார்.

என்ரினி தன் பங்குக்கு ஓட்டங்களை எடுத்துக்கொண்டிருக்க, ஸ்ரெய்ன் மறுமுனையில் பொறுமை காத்தார். இறுதி விக்கெட்டுக்கு இணைப்பாட்டமாக எடுத்த 20 ஓட்டங்களையும் என்ரினியே குவித்தது குறிப்பிடத்தக்கது.

அணியின் ஸ்கோர் 419 ஐ எட்டியபோது - கைல்ஸின் பந்துவீச்சில் என்ரினி ஆட்டமிழந்தார். இவர் 46 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் ஹொகாட் 5 விக்கெட்டுக்களையும், அண்டர்சன் 2 விக்கெட்டுக்களையும், பிளின்ரொப், கைல்ஸ் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது. ட்ரெஸ்கொதிக் - ஸ்ரரஸ் ஜோடி களமிறங்கியபோதும் - ஸ்கோர் 2 ஆக இருந்தபோது ஸ்ரரஸ் டக் அவுட்டாகி வெளியேறினார்.



இதைத்தொடர்ந்து றொபேட் கீ களமிறங்கினார். இவரும் 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் - ஸ்கோர் 51 ஆக இருந்தபோது ஆட்டமிழக்க நேரிட்டது.

என்ரினியின் பந்துவீச்சில் அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்ட நிலையில், அணித்தலைவர் வோகன் களமிறங்கினார். ட்ரெஸ்கொதிக் - வோகன் ஜோடி சிறப்பாக ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்திக்கொண்டிருந்தது.

ஸ்கோர் 175 ஐ எட்டியபோது மைக்கல் 



வோகனின் விக்கெட்டை பொலக் கைப்பற்றினார். இவர் 110 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அடுத்ததாக தோர்ப் களமிறக்கப்பட்டார். ஆனால் ஒரேயொரு ஓட்டத்துடன் கலிஸின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் பெரும் எதிர்பார்ப்புடன் பிளின்ரொப் மைதானத்துக்குள் நுழைந்தார். ஆயினும் ட்ரெஸ்கொதிக் - பிளின்ரொப் ஜோடியால் 10 ஓட்டங்களை மட்டுமே எடுக்கமுடிந்தது. பிளின்ரொப் 12 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்றநிலையில் பொலக்கின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

நான்காம்நாள் ஆட்டநேரமுடிவில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ட்ரெஸ்கொதிக் சதமடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இவர் எடுத்த 10ஆவது சதம் இதுவாகும். ட்ரெஸ்கொதிக் - மைக்கல் வோகன் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 124 ஓட்டங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் என்ரினி, பொலக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், கலிஸ் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## பெண்கள் கிரிக்கெட் இந்திய அணி அறிவிப்பு

(டெல்கி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய பெண்கள் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்தியா வரும் அவுஸ்ரேலிய அணி 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. முதல் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி மைசூரில் நடைபெறவுள்ளது. இத்தொடருக்கான இந்திய அணியில் மோனிகா சும்ரா, வர்ஷா ராபல் ஆகிய இரு புதுமுகங்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டுள்ளது கப்டனாக மமதா மேபனும் பயிற்சியாளராக முன்னாள் கப்டன் சுதா ஷாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணி வருமாறு :-

மமதா மேபன்(கப்டன்), மிதாலிராஜ் (துணைக் கப்டன்), அஞ்சு ஜெயின், அஞ்சும் சோப்ரா, ஜெயசர்மா, ஹேமலதாகலா, ஜுலான் கோஸ்வாமி, அமிதாசர்மா, அருந்ததி கிர்கிரே, வர்ஷா ராபல், தீபா குல்கர்ணி, நீத்து டேவிட், நூஷின் அல்-கதீர், மோனிகா சும்ரா.

## வி.பி. கிண்ணத்துக்கான மூன்றாவது ஆட்டம் நாளை

(அவுஸ்ரேலியா)

வி.பி.கிண்ணத்துக்காக அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டியின் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறும்.

பிரிஸ்பேன் நகரில் நடைபெறும் இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை பாகிஸ்தான் சந்திக்கவுள்ளது.

இரண்டு போட்டிகளிலும் விளையாடி வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி புள்ளிப்பட்டியலில் முதலிடத்திலும், அபார ஓட்டக்குவிப்பில் போனஸ் புள்ளிபெற்ற பாகிஸ்தான் இரண்டாவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்றாவது இடத்திலும் உள்ளன.

# விளையாட்டு

## மும்பை மரதன் போட்டியில் கென்ய வீரருக்கு வெற்றி!



மும்பையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மும்பை சர்வதேச மரதன் போட்டியில் கென்ய வீரரும், எதியோப்பிய வீராங்கனையும் முதலிடங்களைப் பெற்றனர்.

ஆடவருக்கான 42.195 கிலோ மீற்றர் தூரம் கொண்ட மரதன் போட்டியில் கென்யாவைச் சேர்ந்த ஜுலியஸ் சுகுட் 2 மணி 13 நிமிடம் 20 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பெற்றார்.

அவருக்கு நிகராகப் போட்டியிட்ட தன்சானிய வீரர் கிறிஸ்டோபர் இசிஜ்வே, 9 வினாடிகள் கூடுதலாக எடுத்துக்கொண்டதால் இரண்டாம் இடத்தைப் பெற்றார். அவரது நேரம் 2.13:29 வினாடிகள்.

எதியோப்பியாவைச் சேர்ந்த மலிசே காசா 2 மணி 13 நிமிடம் 59 வினாடிகளில் இலக்கை எட்டி 3 ஆவது இடத்தைப் பெற்றார்.

மகளிர் பிரிவில் எதியோப்பியாவைச் சேர்ந்த முலு செபோகா 2 மணி 35 நிமிடம் 03 வினாடிகளில் முதலிடத்தைப் பிடித்தார்.

அதே நாட்டைச் சேர்ந்த லைலா அமான் 2 மணி 36 நிமிடம் 19 வினாடிகளில் இலக்கை எட்டி 2 ஆம் இடத்தையும், ரஷ்யாவைச் சேர்ந்த இரினா திமோபேயெவா 2 மணி 36 நிமிடம் 42 வினாடிகளில் 3 ஆவது இடத்தையும் பெற்றனர்.

21.097 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆண்களுக்கான பாதி மரதன் போட்டியில் முதல் 3 இடங்களையும் இந்தியர்களே வென்றனர்.

25 நாடுகளைச் சேர்ந்த 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர்.

கனவு ஓட்டத்தில் சச்சின் டெண்டுல்கர், அமிதாப் பச்சன், முகேஷ் அம்பானி, ஷாருக் கான், கபில்தேவ், முகமட் அஸாருதீன், அஞ்சு ஜோர்ஜ் உள்ளிட்ட நட்சத்திரங்களும் கலந்து கொண்டனர்.

## பெடரர் சம்பியன்



(சிட்னி)

சிட்னி நகரில் நடந்த சர்வதேச ரெனிஸ் போட்டியில் ரோஜர் பெடரர் சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளார்.


கிராண்ட்ஸ்லாம் பட்டத்துக்கான அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி வரை மெல்பேர்ன் நகரில் நடக்கவுள்ளது. இதன் முன்னோட்டமாக சிட்னி நகரில் சர்வதேச ரெனிஸ் போட்டி ஒன்று நடந்தது.

இந்தப் போட்டிக்கான இறுதி ஆட்டத்தில் சர்வதேச தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் ரோஜர் பெடரர் மற்றும் 2ஆவது இடத்தில் இருக்கும் ரொடிக் ஆகியோர் மோதினர்.

அதிக பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட இந்தப் போட்டியில் பெடரர் 6-4 7-5 என்ற நேர் செட்கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

கடந்த ஆண்டு சர்வதேச ரெனிஸ் போட்டியில் 3 கிராண்ட் ஸ்லாம் கோப்பைகளை கைப்பற்றிய ரோஜர் தொடர்ந்து 2ஆவது முறையாக அவுஸ்ரேலிய ஓபன் பட்டத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் காத்திருக்கிறார்.

## தைபுவின் அபார ஆட்டத்தால் சிம்பாப்வே 286 ஓட்டங்கள் குவிப்பு



(டாக்கா)

சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இறுதிநாளான இன்று பங்களாதேஷ் அணி வெற்றிபெறுவதற்கு 275 ஓட்டங்களைப்பெறவேண்டிய நிலையில் உள்ளது.

சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸில் 298 ஓட்டங்களை எடுத்திருந்தது. பதிலுக்கு ஆடிய பங்களாதேஷ் அணி 211 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது.

இதையடுத்து சிம்பாப்வே அணி துடுப்பெடுத்தாடியது. 37 ஓட்டங்களை எடுப்பதற்குள் சிம்பாப்வே அணி நான்கு விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்தது. மட்சிகென்யேரி 14 ஓட்டங்களுடனும், இப்ராஹிம் 1 ஓட்டத்துடனும், மசகட்சா 1 ஓட்டத்துடனும், ரோஜர் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து ரெய்லருடன் தைபு இணைந்துகொண்டு அபாரமாக ஆடினார். இருவரும் இணைந்து சிக்ஸர்கள், பவுண்டரிகளாக விளாசியதால் அணியின் ஸ்கோர் விரைவாக உயர்ந்தது.

ஸ்கோர் 187 ஐத்தொட்டபோது - ரெய்லரின் விக்கெட்டை இனாமுல் ஹக் வீழ்த்தினார். ரெய்லர் 135 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகளுடன் 78 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் அணித்தலைவர் தைபு தனிநபராக ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தார். சிகும்புரா - 0, பன்யங்கரா 6, கிறீமர் - 0, ஹொண்டோ -3 என விக்கெட்டுக்கள் சரிந்தன.

இந்தநிலையில் தைபு மட்டும் 153 ஓட்டங்களைக் குவித்து கடைசி விக்கெட்டாக ஆட்டமிழந்தார். இவர் 292 பந்துகளில் 19 பவுண்டரிகள் 2 சிக்ஸர்களுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

286 ஓட்டங்களுக்கு சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால், பங்களாதேஷ் அணி வெற்றிபெற 378 ஓட்டங்களை எடுக்கவேண்டியிருந்தது.

பந்துவீச்சில் இனாமுல் ஹக் 5 விக்கெட்டுக்களையும், மொர்ராஸா 3 விக்கெட்டுக்க



ளையும், ரபீக், அஷ்ரபுல் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்று ஆட்டநேரமுடிவில் - விக்கெட் இழப்பின்றி 98 ஓட்டங்களைப் பெற்றது.

ஜாவிட் ஓமர் - நபீஸ் இக்பால் ஜோடி அபாரமாக ஆடியது. ஓமர் 187 பந்துகளில் 36 ஓட்டங்களையும், நபீஸ் இக்பால் 55 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்தநிலையில் 275 ஓட்டங்களை இன்னும் எடுத்தால் இறுதிநாளான இன்று பங்களாதேஷ் அணியால் வெற்றிபெறமுடியும்.

# பதவியுயர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

அரச எழுதுநர் சேவை, அங்கீகரிக்கப்பட்ட பிற சேவைகளின் அரச சிறாப்பர் சேவை, அரச கணக்குப் பதிவுநர் சேவை, அரச பண்டகசாலைக் காப்பாளர் சேவை, அரச தட்டெழுத்தாளர் சேவை போன்ற சேவைகளில் வகுப்பு 11 தரம் 'ஆ' விலுள்ளவர்களை, வகுப்பு தரம் 11 'அ' விற்கு தரம் உயர்த்துவதற்கான தகைமைப் பரீட்சை ஒன்றை - பரீட்சை ஆணையாளர் நாயகம் இந்த வருடம் ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் நடத்துவதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட சேவைகளில் உள்ள மூன்று வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர், தமது நியமனத்தை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள் தோற்ற முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏதாவது ஒரு காரணத்துக்காக இதுவரை தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாத ஊழியர்கள் - தமது பதவியை உறுதிப்படுத்தப்படுவதற்குத் தேவையான அனைதது விடயங்களிலும் அவர்கள் தகுதி உடையவர்களே என்ற, திணைக்களத் தலைவர்களின் திருப்தியின் அடிப்படையில், அவர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்ற எதிர்பார்த்தலுடன், இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக, தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைக்குமாறு, பரீட்சை ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார்.


இவை தொடர்பான மேலதிக விபரங்களை இந்த மாதம் 13 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (31)

## அரசறிவியலாளன் சஞ்சிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தினரின் - அரசறிவியலாளன் சஞ்சிகை வெளியீட்டுவிழா நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எம்.றசீதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், சிறப்புரையை பேராசிரியர் ஏ.வி.மணிவாசகரும், வெளியீட்டுரையை கலாநிதி கே.இரகுநாதனும், மதிப்பீட்டுரையை பேராசிரியர் வி.பி.சிவநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர் செல்வரமணாவின் 'வேலி' கவிதைநூல் வெளியீட்டு விழாவில் விரிவுரையாளர் மணியூர் ரட்ணேஸ்வரன் கவிதை நூலை வெளியிட்டு வைப்பதையும், பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் பெற்றுக்கொள்வதையும் காணலாம்.

# கியூடெக் நிறுவனத்தினரால் உதவிப் பொருட்கள் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சுனாமி பேரனர்த்தத்தையடுத்து முல்லைத்தீவிலிருந்து இடம் பெயர்ந்து சாவகச்சேரியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு கியூடெக் நிறுவனத்தால் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கடந்தவாரம் அருட்தந்தை ரவிச்சந்திரன் தலைமையில் சாவகச்சேரிக்குச் சென்ற குழுவினரால் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமையற் பாத்திரங்கள், உடுபுடைவைகள் என்பன வழங்கப்பட்டன.

இதேவேளை, வடமராட்சியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போருக்கும் இவ்வாறான உதவிப் பொருட்களை வழங்கவுள்ளதாகவும், நிறுவன இயக்குநர் அருட்திரு யோ.ஜெயக்குமார் தெரிவித்தார். (91)

# நலன்புரி நிலையங்களுக்கே சென்று தபால்களை விநியோகிக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான அனைத்துத் தபால்களையும், பாதுகாப்பான முறையில் அவர்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கு நேரடியாகக் கொண்டு சென்று வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, உப தபால் அதிபர்களை - வடபிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபர் நா.ஜெயரத்தினம் பணித்துள்ளார்.

அத்துடன், தற்போது இடம் பெயர்ந்து தற்காலிக இடங்களில் இயங்கிவரும் உப தபாலகங்களை, எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் உரிய பகுதிகளில், பொருத்தமான இடங்களில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் உப தபாலதிபர்களை அவர் பணித்துள்ளார். (31)

# சின்னஞ்சிறு செய்திகள்

### அரிச்சுவடிகளை அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

தைப்பூசத் திருநாளன்று ஏடு தொடக்கி வித்தியாரம்பம் செய்யவிருக்கும் ஆலயங்களும், சைவ சமய நிறுவனங்களும், சனசமூக நிலையங்களும், பாலர் பாடசாலைகளும் ஏட்டு அரிச்சுவடிகளை காங்கேசன்துறை வீதியிலுள்ள மில்க்வைற் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தொழிலதிபர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார்.

### வடமராட்சி கடற்கரையில் முருகைக்கல் வேலிகள் அமைக்கப்படவுள்ளன

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்கரையோரங்களில் தடுப்பு அணைச் சுவர்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுனாமி கடற்கொந்தளிப்பு போன்ற கடற் அனர்த்தங்களிலிருந்து கரையோரங்களைப் பாதுகாப்பதற்காகவே, இவ்வாறு தடுப்பணை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தடுப்புச் சுவர் கட்டுவதற்கு முன்னர் சுனாமி கடற்கொந்தளிப்பால் சிதறுண்டுபோன முருகைக்கல் வேலியை மீள அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கரையிலிருந்து கடலுக்குள் 50 மீற்றர் தொலைவில் இந்தக் கல்வேலி அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

### விவசாய வீதி திறந்துவைப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தால், புதிய வீதி நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் தலைமையில் இடம்பெற்ற இந்த விவசாய வீதி திறப்புவிழாவில், விவசாய வீதியின் பெயர்ப் பலகையை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.சுப்பிரமணிய சர்மா திரைநீக்கம் செய்துவைத்தார். (91)

### தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட பெண் மரணமடைந்தார்

தீக்காயங்களுடன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 4 பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண் - சிகிச்சை பயனளிக்காத நிலையில் 10 நாட்களின் பின்னர் உயிரிழந்தார்.

பருத்தித்துறை வி.எம்.வீதியையைச் சேர்ந்த திருமதி சிவகுமாரி பார்த்தீபன் (வயது 34) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை பதில் நீதிவான் சபாரவீந்திரன் விசாரணைகளை மேற்கொண்டு, தீக்காயங்களால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (14)

### கியூடெக் நிறுவனம் உதவி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் தங்கிருக்கின்ற மாணவர்களுக்கு கியூடெக் நிறுவனம் உபகரணங்களையும், பெண்களுக்கான உடுப்பு வகைகள் மற்றும் பாதணிகளையும் முதற்கட்டமாக வழங்கியுள்ளது.

### உளநல ஆற்றுப்படுத்தல் செயற்திட்டம்

நவாலி ஹேமலதா செல்வராசா குழந்தைகள் ஞாபகார்த்த நிதிய நிறுவனத்தினர், சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு - உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை கடந்த மூன்று வாரங்களாக நடத்தி வருகின்றனர். (91)

### முல்லைத்தீவுக்கு நிவாரணப் பொருட்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு, கொழும்பு மாதர் சங்கம் அனுப்பிவைத்துள்ள நிவாரணப் பொருட்கள் - முல்லைத்தீவுப் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆசிரம பீடாதிபதி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார். (14)

# அவசர உதவிகளில் ஈடுபடுமாறு உள்ளூராட்சி சபைகளுக்கு பணிப்பு

சகல உள்ளூராட்சி மன்றங்களும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவிகள் புனரமைப்பு மற்றும் சிரமதானப் பணிகளில் உடனடியாக ஈடுபடுமாறு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சகல சபைகளது செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கு நலன்புரி நிலையங்களுக்கு பவுசர்களூடாகக் குடிநீர் விநியோகம், நலன்புரி நிலையங்களுக்குத் தற்காலிக மலசல கூடங்களை அமைத்தல், திண்மக் கழிவுகளை உடனுக்குடன் அகற்றுதல், தொற்று நீக்கி மருந்துகள் விசிறல், கட்டட இடிபாடுகளை அகற்றுதல், வீதிகளைப் புனரமைத்து செப்பனிடல் போன்ற அவசிய செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி- உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளுக்குட்பட்ட பொதுச்சொத்துக்கள் சேதமடைந்து அழிவடைந்திருந்தால், அவற்றின் விபரங்களை சேகரித்து அனுப்புமாறும் கேட்டுள்ளார். (91)

### உறவினர் வீடுகளில் தங்கியிருப்போருக்கும் நிவாரண உதவி

இயற்கை அனர்த்தத்தால் பாதிப்படைந்து, சில்லாலையிலுள்ள உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ள செம்பியன்பற்று, தாளையடியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு கியூடெக் நிறுவனம் உலர் உணவுகளையும், வீட்டுப் பாவனைப் பொருட்களையும் வழங்கியுள்ளது.

# தமிழ் மாணவர் ஒன்றியத்தின் சுனாமி கல்வி நிவாரணப்பணி

(யாழ்ப்பாணம்)

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் எதிர்கால கல்வி நலனை மேம்படுத்தும் நோக்கில், தமிழ் மாணவர் ஒன்றியத்தால் 'சுனாமி கல்வி நிவாரணப் பணி' எனும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிவாரணப் பணி மூலம், கற்றல் உபகரணங்கள் மற்றும் சீருடைத்துணிகள் என்பன சேகரிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதோடு, அவர்களுடைய கல்வித் தேவைகள் தொடர்பான விபரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வசிக்கும் மாணவர்களை - இல: 155, கோவில் வீதி, கம்பன்கோட்டத்துக்கு முன்பாக நல்லூர் எனும் முகவரியிலுள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சிறு முயற்சிகள் அபிவிருத்திபிரிவு பணிநிலைக்கு ஆட்சேர்ப்பு

விளையாட்டுத்துறை இளைஞர் அலுவல்கள் அமைச்சின் சிறு முயற்சிகள் அபிவிருத்திப்பிரிவு, முயற்சி அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

18 வயதுக்கும் - 45 வயதுக்கும் இடைப்பட்ட பட்டதாரிகள் இந்தப் பணிநிலைக்கு விண்ணப்பிக்க முடியும்.

தகுதியுடையவர்கள் பெப்ரவரி 11 ஆம் திகதிக்கு முன்பாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு, விளையாட்டுத்துறை இளைஞர் அலுவல்கள் அமைச்சுச் செயலாளர் கோரியுள்ளார்.

மேலதிக தகவல்களும், மாதிரி விண்ணப்பப் படிவமும் இந்த மாதம் 13 ஆம் திகதி அரச வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியாகியுள்ளன. (31)

# தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மதிய உணவு வழங்கல் நடைமுறை

தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 8 வரையான மாணவர்களுக்கு பாடசாலை நேரசூசிகைக்குப் புறம்பாக - மதிய உணவு வழங்கலுடன், ஒழுங்கமைக்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ், உள சமூக மேம்பாட்டுத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையுடன் இணைந்து செயற்படுத்திவரும் பாடசாலை சிறுவர்களுக்கான 'சுகாதாரமும் உள சமூகவியலும்' என்ற திட்டத்தின் கீழ் இது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் குறிப்பிட்ட வகுப்புக்களில் இயங்கும் அனைத்து மாணவர்களுக்கும் போஷாக்கான உணவு வழங்கலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன், போதுமான அளவில் இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கு உதவும் கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (31)

### மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யுனிசெப் அமைப்பு சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முதற்கட்டமாக கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

மாணவர்கள் பலர் கற்றல் உபகரணங்களை இழந்து, தமது கல்வியைத் தொடரமுடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களில் 2250 பேருக்கு முதற்கட்டமாக யுனிசெப் அமைப்பு கற்றல் உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளது.





# எலக்ரோனிக் கார்னிவேல்



வருடாவருடம், மைக்கிறோ சொவ்ட் கம்பனியால் விற்பனை செய்யப்படுகின்ற இலத்திரனியல் பொருட்களின் விற்பனை, விழாவில் இந்தமுறை 50 ஆயிரம் புதிய கணினிப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் வைக்கப்பட்டிருந்த ஒரு தட்டைவடிவமுடைய திரையைக் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டி எல்லோரையும் கவரக் கூடியதாக இருந்தது. இந்த விற்பனை விழாவில் ஏறக்குறைய 120 ஆயிரம் மக்கள் கலந்துகொண்டதாகவும் கூறப்படுகிறது. அமெரிக்காவில் 2003 ஆம் ஆண்டில் வந்த வாடிக்கையாளர்களிலும் பார்க்க ஏறக்குறைய 11 வீதமான வாடிக்கையாளர்கள் அதிகம் வந்திருப்பதாகத் தகவல்கள் தெரி விக்கின்றன. இதேவேளை 2005 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த இலத்திரனியல் சாதனங்களும் நவீன வகை மொபைல் தொலைபேசிகளும் அங்கே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

52 வீதமான அமெரிக்கர்களின் வீடுகள் ஒரு குறித்த வகை வலையமைப்பு அதாவது – இலத்திரன் வலையமைப்புக்குட்பட்டுக் காணப்படுகின்றன.



கணினியில் தற்போது காணப்படுகின்ற எக்ஸ்பியிற்காக 2006 ஆம் ஆண்டில் ஒரு புதிய வகை கணினி மென்பொருளைச் சந்தைக்கு அனுப்ப மைக்கிறோ சொவ்ட் நிறுவனம் பாடுபடப்போவதாக அந்த நிறுவனத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

# எச்சரிக்கை செய்யப்பட்ட சுனாமி

சுனாமி பேரழிவு என்பது எமது நாட்டுக்கு உண்மையில் ஒரு புதிய விடயம் தான். ஆனால் ஜப்பான் நாட்டுக்கு இந்தத் தாக்கம் பழகிப்போன விடயம். ஜப்பான் நாட்டு மக்களுக்கு பூமியதிர்ச்சி என்பது – அடிக்கடி வருகின்ற துன்பகரமான கொண்டாட்டமாக இருக்கிறது. ஜப்பான் நாட்டில் சுனாமி எச்சரிக்கை சேவை 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆறு பெரிய நிலையங்கள் அத்துடன் 300 உதவி நிலையங்கள் ஆகியவற்றுடன் இந்தச் சுனாமி எச்சரிக்கை நிலையங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன. ஆனால் இந்த எச்சரிக்கை அங்கத்துவம் பெற்ற பிரதேசங்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படுகிறது. 1993 ஆண்டு கொக்கைடோ என்ற இடத்தில் இந்தச் சுனாமி அழிவு ஏற்பட்டது. 1999 ஆம் ஆண்டில் இந்தச் சுனாமி அழிவை எச்சரிக்கை செய்கின்ற அமைப்பு. நவீன மயப்படுத்தப்பட்டது. ஏறக்குறைய வருடாவருடம் 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை இந்த அமைப்புக்காகச் செலவு செய்யப்படுகிறது. 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொபே பூமியதிர்ச்சியை ஏற்கனவே அறிவித்ததனால். பல இடங்களில் இருந்து மக்களினுடைய உயிர்கள் பாதுகாக்கப்பட்டன. ஆனாலும் அண்மையில் நடந்து முடிந்த சுனாமி அலையின் தாக்கம் – மிகவும் அதிகம் என்று ஜப்பானுடைய சுனாமி எச்சரிக்கை நிறுவனத்தின் அதிகாரிகள் மிகக் கவலையுடன் தெரிவிக்கிறார்கள்.



AP



# புதிய முக நாய்கள்


பாரம் பரியமாக நாய் முகம் என்பது – மக்கள் எல்லோரும் பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன முகம்தான். ஆனால் இப்போது ஐரோப்பிய நாடுகளில் உருவாக்கப்படுகின்ற நாய்கள் வித்தியாசமான முகத்தை உடையதாகவும், முற்றுமுழுதாக நாயின் முகத்தைவிட வேறுபட்டதாகவும் காணப்படுகின்றன. கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தற்போது புதிய இன நாய்களை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இப்படியாகச் செயற்கையாக உருவாக்கப்படுகின்ற நாய்கள் இலகுவில் நோய்வாய்ப்படுகிறது. அத்துடன் இந்த நாய்களுக்கு வருகின்ற நோய்களை வைத்தியர்களால் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. ஐரிஷ் என்ற நாய்கள் அல்சேஷன் நாய்களிலும் பார்க்க வித்தியாசமானவை. இவை ஆரம்பத்தில் மிகவும் போஷாக்குள்ளதாகக் காணப்படுகின்றன. ஆனால் காலப்போக்கில் இவை நோய்வாய்ப்பட்டு, மயிர்கள் யாவும் கொட்டிப் போகின்றன.

செயற்கை ஜீன்கள் இந்த நாயினுடைய தோற்றம் மற்றும் பல தரப்பட்ட அங்க அசைவுகள் ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றன. இது நாய்களுக்கு நன்மையா? தீமையா?

# ரொக்கட் எரிபொருள் தாங்கி

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக்கூடம் நாஸாவால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய விண்வெளிக்கல எரிபொருள்தாங்கி மூலம், சில விண்வெளி விபத்துக்கள் பற்றிய கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் இடம்பெற்ற கொலம்பிய விண்கல விபத்துக்களுக்குப் பிறகு, நாஸாவின் கெனடி விண்வெளி ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட ஆராய்ச்சிகளின் ஒரு முடிவாக இது கருதப்படுவதாக, உலகளாவிய ரீதியில் விண்வெளி ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஏறக்குறைய 47 மீற்றர் நீளமான, குண்டு வடிவத்தை ஒத்த இந்த எரிபொருள் தாங்கி - 2005 ஆம் ஆண்டு மே மாதமளவில் தனது பயணத்தைத் தொடங்குவதற்காக ஒரு விண்கலத்தில் பொருத்தப்படும் எனக் கூறப்படுகிறது.


கொலம்பிய விண்கலத்தில் உண்மையாக ஏற்பட்ட விபத்து - எரிபொருள் தாங்கியில் ஏற்பட்ட துவாரம்தான் என அடித்துக் கூறப்படுகிறது. இதன் காரணமாகத்தான் தற்போது உருவாக்கப்படுகின்ற பெரும்பாலான விண்கலங்களில் எரிபொருள் தாங்கி மிகவும் கருத்தில் எடுக்கப்படுகிறது. ரொக்கட் வடிவமாகவே இது காணப்படுவதால், இதனைப் பொருத்துவது மிகவும் இலகுவாகிறது. இதில் காணப்படுகின்ற தன்னியக்க கூலர் மற்றும் வெப்பமாக்கி ஆகியன எரிபொருள் தாங்கியைப் பலதரப்பட்ட காலநிலைகளிலிருந்து பாதுகாக்கிறது.



AP

# புதிய ரொட்டகள்


ஐதரசன் பரவொட்சைட், எரிபொருள் தற்போது கூடுதலாக உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுகின்ற மிக முக்கியமான எரிபொருட்களுள் ஒன்றாக இருக்கிறது. டொரன்டோ பல்கலைக்கழகத்தில் உலோக ரொட்களுக்குப் பதிலாக, நனோ காற்றாடிகள் பாவிக்கலாம் எனவும், இது உலோகத்திலும் பார்க்க 500 மடங்கு சிறியது எனவும் கூறப்படுகிறது. 2000 ஆம் ஆண்டுக்குப் பின் இவை ஏற்கனவே கலிபோர்னியப் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் பாவிக்கப்பட்டது. இந்தச் சிறிய ரொட்கள் மிகச் சிறியளவாதலால், பல தளங்களுக்கும் சுழலக்கூடியது. இதன் காரணமாகச் சில வேளைகளில் உடைப்பு ஏற்படவாய்ப்பாகிறது எனக் கூறப்படுகிறது. இந்த ரொட்களை இயக்குவதற்கு ஐதரசன் பரவொட்சைட் பயன்படுத்தப்படுகிறது. இதனுடைய அகலம் மனிதர்களுடைய மயிர் அளவுக்கு இருக்கும் எனவும் கூறப்படுகிறது. இவை தங்கம் மற்றும் நிக்கல் ஆகியவற்றால் உருவாக்கப்படுகிறது. பழைய உலோக ரொட்களிலும் வேகம் அதிகம், அத்துடன் பாரம் குறைவு, எரிபொருள் செலவு மிச்சம் ஆகியன இந்த ரொட்களைத் தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவு செய்வதற்கான காரணங்கள் எனக் கூறலாம்.



# சிக்கலான மூக்கு

நம்முடைய மூக்கு மிகவும் சிக்கலானதும், வைத்தியர்களுக்கு சவால் விடுகின்றதுமான ஒரு வகைக் கலமாகத் தற்போது காணப்படுகிறது. மூக்கு ஜம்போ ஜெட்டினுடைய செட்டைகளிலும் பார்க்க, மிகவும் சிக்கலானது எனக்கூறப்படுகிறது.

லண்டனிலுள்ள இம்பீரியல் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்கள் - ஒரு செயற்கை மூக்கை வைத்து, ஒரு மனித மூக்கின் செயற்பாடுகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். மூக்கின் அமைப்பு மனிதர்களுக்கு மனிதர்கள் வித்தியாசப்படுவது யாவருமறிந்தது. மூக்கின் வெளித்தோற்றம் கருத்திற் கொள்ளப்படுகிறது. இதனுடைய உள்ளமைப்பு மூக்கின் உட்சுவாசக் காற்று, வெளிச்சுவாசக் காற்று ஆகியவற்றைத் தீர்மானிக்கிறது. மூக்கில் காணப்படுகின்ற மயிர்த்துளைக் குழாய்கள் இதயத்துடன் நேரடித் தொடர்புடையவை. மூக்கில் ஏற்படும் அதாவது– உள் மூக்கில் ஏற்படும் இரத்தப்பெருக்கு இதயத்தைப் பாதிக்கிறது என, மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். உட்சுவாசம் மற்றும் வெளிச்சுவாசம் ஆகியன இரத்தச் சுற்றோட்டத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக மூக்கு மிகவும் சிக்கலானதாகவுள்ளது.



## திரை விமர்சனம்

# ஜனனம்

எப்பொழுதோ எடுக்க ஆரம்பித்த படம் இப்போதுதான் வெளிவந்திருக்கிறது. ஆனால், படம் டப்பாவுக்குள் சுருண்டு விட்டது.

வேலையற்றபட்டதாரி அருண்குமார் தன்போன்றவர்களுக்காகப் பாடுபடுகிறார். இந்த நிலையில் எழுத்தாளர் ஒருவரைச் சந்திக்கிறார். அதன்பிறகு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தை உருவாக்கும்படி ரகுவரன் கூறுகிறார். இதேவேளை ஊழல் அமைச்சர் ஆஷிஷ் வித்யார்த்திக்கும், அருண்குமாருக்குமிடையில் பகை ஏற்படுகிறது. இதனால் அருண்குமாரின் நண்பர் சார்லி கொல்லப்படுகிறார். இதன்பின்னர் வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம் உருவெடுக்கிறது. இதற்கிடையில் நிழல்கள் ரவியின் மகள் பிரியங்கா திரிவேதிக்கும், அருண்குமாருக்கும் காதல் ஏற்படுகிறது.



அமைச்சரால் வேலையற்ற பட்டதாரி அமைப்பின் உறுப்பினர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள். ரகுவரன் பொலிஸாரால் கொல்லப்படுகிறார். பின்பு அருண்குமாரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்படுகிறார். இதே வேளை மக்கள் ஆதரவு அருண்குமாருக்குக் கிடைக்கிறது. எவரை முதலமைச்சர் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்கிறார் இதுதான் முடிவு.

கதையின் கரு - வேலையில்லாப் பிரச்சினை. இயக்குநர் ரமேஷ்'டைய திரைக்கதை தொய்ந்து போயிருக்கிறது. சார்லி நகைச்சுவை செய்திருக்கிறாரா? படத்தில் அவருடைய வழவழப்பு தேவையில்லாத ஒன்று. வடிவேலுவின் நகைச்சுவை பரவாயில்லை. பிரியங்கா திரிவேதி நடிக்க இடமேயில்லை. ரகுவரன் ஆஷிஷ் வித்யார்த்தி இருவரும் தங்கள் பங்கைச் சிறப்பாக முடித்திருக்கிறார்கள். பரத்வாஜின் இசையில் பாடல்கள் பரவாயில்லை. வசனம் - பாலகுமாரன். இது இருவருக்கும் விழுந்த அடிதான்.

"ஜனனம் பரிதாபத்துக்குரிய பிறப்பு" - பிருந்தி.

# மிருகங்களின் புதிய கூட்டமைப்பு

ஒரு வயதுள்ள காண்டாமிருகமும், ஏறக்குறைய 10 வயதுடைய ஆமையும் நல்ல நண்பர்களாக இருப்பது பலரை ஆச்சரியப்படவைத்துள்ளது. இதற்கு- இரண்டு பிராணிகளும் ஒத்த நிறத்தையுடையவையாக இருப்பதுதான் காரணம் எனக் கூறப்படுகிறது. இதில் என்ன புதினம் என்றால், இரண்டும் ஒன்றாகவே சாப்பிடுகின்றன. அத்துடன் ஒன்றாகவே நித்திரை செய்கின்றன. இந்த அற்புதம் யாவும் கென்யாவிலுள்ள ஒரு கிராமத்தில் நடந்து கொண்டிருக்கிறது. 2002 ஆம் ஆண்டு இதேபோன்ற ஒரு சம்பவம் - சம்புறு என்ற தேசியப் பூங்காவில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.




இந்த மிருகங்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால், ஆரம்பத்தில் இந்த மிருகங்கள் தனிமையில் இருந்ததாகவும், காலப்போக்கில் இவை வெவ்வேறு இன மிருகங்களுடன் கூட்டமைப்புச் சேர்ந்ததாகவும், காட்டிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். உண்மையில் நாயின்மேல் பூனை ஏறியிருப்பதும், அத்துடன் பூனைக் குட்டிகளுக்கு நாய் பால்கொடுப்பதும் இந்தக் கலிகாலத்தில் ஆச்சரியப்பட வைப்பதற்கில்லை.

# ஒலிவ் ஒயில் குணப்படுத்தும் நோய்கள்




ஒலிவ் ஒயில் பாவனை ஓரளவு புற்றுநோயைத் தடுக்கும் எனக்கூறப்படுகிறது. தற்போது ஒலிவ் ஒயில் கூடுதலாகப் பாவிக்கின்ற மார்புப் புற்று நோயாளர்கள் குணமடைந்து வருகிறார்கள் என, நோர்த் வெஸ்டேன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக ஒலிவ் ஒயில் உணவுகள் அதிகம் ஐரோப்பிய நாடுகளில் பாவிக்கப்படுகின்றன. ஒலிவ் ஒயில் மட்டுமல்ல, தற்போது மார்புப் புற்று நோய்க்கான ஒருவகை மருந்தாகக் கேர்செப்டின் நோயாளர்களைப் பல காலம் உயிருடன் வாழவைத்திருக்கிறது எனக் கூறப்படுகிறது. இந்த வகை மருந்தில் கூறப்படுகின்ற ஒருவகை இரசாயனப் பொருள் - ஒலிவ் ஒயிலில் காணப்படுவதாக கூறப்படுகிறது. தற்போது இந்த ஒலிவ் ஒயில் உணவுகள் இதய நோயையும் ஓரளவு குணமாக்கக் கூடியனவாக இருப்பதாக விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன. பரம்பரையாக வருகின்ற புற்றுநோய்களையும் ஒலிவ் ஒயில் மூலம் ஓரளவு குணப்படுத்த முடியுமா? என ஆய்வாளர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். தற்போது புற்றுநோய்க்கு எதிரான மருத்துவக் கண்டுபிடிப்புகளில் இது ஒரு மைல் கல் தான்.

# பழைய கையடக்கத் தொலைபேசிகள்

கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்கத் தொடங்கி ஏறத்தாழ 20 வருடங்களாகின்றன. தற்போது ஐரோப்பிய நாடுகளில் 20 ஆவது ஆண்டுநிறைவு கடந்த கிழமை கொண்டாடப்பட்டது. 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி வொடபோன் நெட்வேர்க் பிரித்தானியாவில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. அப்போது மக்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பெரிதாக விரும்பவில்லை. அவர்கள் வீட்டுத் தொலைபேசிகளையே பெரிதும் விரும்பினார்கள். அப்போது இருந்த தொழில்நுட்பவியலாளர்களின் கருத்துப்படி, கையடக்கத் தொலைபேசிகளின் எதிர்காலம் மிகவும் கேள்விக்குறியாகவே இருந்தது. ஆனால் 1973 ஆம் ஆண்டில் சாதாரணமாக நியூயோர்க் நகரில் கையடக்கத் தொலைபேசி என்ற ஒரு கதை அரசல் புரசலாகக் கிளம்பத் தொடங்கியிருந்தது. முதன்முதலாகவந்த கையடக்கத் தொலைபேசி - ஒரு சிறிய சூட்கேஸ் அளவுக்கு இருந்தது. அப்போது அது 2000 ஸ்ரேலிங் பவுண்ஸ்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் வாடிக்கையாளர்கள் வொடபோன் கம்பனிக்கு மிகவும் குறைவாகவே இருந்தனர். ஆனால் தற்போது ஏறக்குறைய 14 மில்லியன் வாடிக்கையாளர்கள் உலகளாவியரீதியில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.




# ரீவியின் எதிர்காலம்




தொலைக்காட்சிப் பெட்டியின் கண்டுபிடிப்பைப் பழித்தவர்கள் எல்லோரும் தற்போது அதனுடைய புதிய பரிணாமத்தையும் மற்றும் அதனுடைய அற்புதமான பயன்பாட்டையும் நினைத்து ரீவி இல்லா வீட்டில் குடியிருக்கவேண்டாம் என்ற புதுமொழியை நினைவுக்குக் கொண்டுவருகிறார்கள். இதேவேளை சாதாரணமான ரீவி நிகழ்ச்சிகளைவிட, கேபிள் ரீவி நிகழ்ச்சிகளைப் பார்க்கவே மக்கள் விரும்புகிறார்கள் எனக் கூறப்படுகிறது. ஐரோப்பாவில் பாவிக்கப்படுகின்ற ஸ்கை எனப்படும் ஒருவகை அமைப்பு - பலதரப்பட்ட ரீவி நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடியவாறு உள்ளது. இதேமாதிரியான இலத்திரனியல் சாதனங்களை அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளும் பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய 50 ஆயிரம் புதியவகைத் தொழில்நுட்பங்கள் பலதரப்பட்ட ரீவிக் கம்பனிகளால் புகுத்தப்பட்டிருக்கின்றன. இதேவேளை டிஜிற்றல், டிவிடி, எல்சிடி, டிவோ, டிவிஆர் ஆகியன சில தொழில்நுட்ப அம்சங்களாகும். மைக்கிரோ சொவ்ட் கணினிக் கம்பனியினுடைய தலைவர் பில்கேட்ஸ்'டைய அறிவித்தலின்படி, டிவோடோகோ என்ற ஒரு முறை கணினிகளிலிருந்து மொபைல் கையடக்கத் தொலைபேசிகளுக்குச் சில தகவல்களைப் பரிமாறக்கூடிய புதிய அமைப்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொலைக்காட்சியிலும் பார்க்கலாம்.

# மலிவான செயற்கைப் புரதம்

இஸ்ரேலிலுள்ள ஒரு பிரசித்திபெற்ற மரத்திலிருந்து புரதச்சத்துப் பெறக்கூடியதாக இருக்கிறது எனக் கூறப்படுகிறது. புரதம் எஸ்பி - 1 எனப்படுகின்ற ஒருவகைப் புரதமே பெறக்கூடியதாக இருக்கிறது. ஜெருசலேத்தில் காணப்படுகின்ற கிபிரு பல்கலைக்கழகத்தில் ஆய்வாளர்கள் எல்லோரும் ஒன்றுகூடி, இந்தப் புரதத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என ஆராய்ந்துகொண்டு வருகிறார்கள். இந்தப் புரதம் டியூமர் நோய்களைக் குறைக்கக் கூடியவாறு இருப்பதாகக் கூறப்படுகிறது. இரத்தக்குழாய்களில் ஏற்படுகின்ற டியூமர் நோய்களைக் குணமாக்க, இந்தச் செயற்கைப் புரதத்தைப் பயன்படுத்தலாமா என ஐசீ வெக் லிமிட்டட் என்ற கம்பனி தன்னுடைய முழுமூச்சான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறது. சில நோயாளிகளுடைய சிறுநீரகங்களும் இந்தவகை நோயால் பழுதடையக்கூடிய நிலை தோன்றுவதாகக் கூறப்படுகிறது. இதன்மூலம் சிறுநீரகங்களை அதாவது - செயற்கைப் புரதங்கள் மூலம் உடலிலுள்ள முக்கியமான உறுப்புகளுடைய அழிவைக் கட்டுப்படுத்தலாமா? எனவும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.



# கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவு நாள் தாயகப் பகுதி எங்கும் அனுஷ்டிப்பு

மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட, 10 மாவீரர்களின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் -தமிழர் தாயகப் பகுதியெங்கும் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நிகழ்வுகள் - கேணல கிட்டு பீரங்கிப் படையணி, லெப். கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி போராளிகளின் தளங்களில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொது ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை வடமுனை கட்டளைத்தளபதி கேணல் தீபன் ஏற்றினார். மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீர்களின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரை - கடற்புலிகளின் மகளிர் படையணித் தளபதிகளில் ஒருவரான கங்கா, லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் மகளிர் படையணி தளபதி பவநிதி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் பொது ஈகச்சுடரை, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சின்னணணா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை புதுக்குடியிருப்பு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இளஞ்செழியன் ஏற்றி வைத்தார். மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடரை, தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றி வைத்தார்.

பரந்தனில் இடம்பெற்ற நிகழ்வல் ஈகச்சுடரை - பிரதேச மாதர் சங்கத் தலைவி றோசலின், செயலாளர் பூரணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக்கொடியை பிரதேசப் பொறுப்பாளர் ஈகைவீரன் ஏற்றி வைத்தார். திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடரை பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் பரந்தாமன் மற்றும் ஜெயந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மலர் மாலையை கடற்கரும் புலி கப்டன் அறிவரசனின் சகோதரன் குகன் அணிவித்தார். தொடர்ந்து மலர்வணக்கம் இடம்பெற்றது.

மன்னார் - அடம்பன் பிரதேச அரசியற்துறை செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வில், பொது ஈகச்சுடரை பிரதேசப் பொறுப்பாளர் காஞ்சனன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றினார். திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடரை - மன்னார் மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் றொபேட், மன்னார் வர்த்தக சங்கத் தலைவர் ராஜன் ஆகியோர் ஏற்றினர். மலர் மாலையை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் அணிவித்தார்.

கிளிநொச்சி - தமிழீழ காவல் துறை நடுவப்பணியகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் - பொது ஈகச் சுடரை கிளிநொச்சி மாவட்ட கண் காணிப்பாளர் தனஞ்செயன் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை பரிசோதகர் பவானி ஏற்றிவைக்க, மலர்மாலையை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அணிவித்தார்.

தமிழீழ காவல்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணியகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் - பொது ஈகச் சுடரைத் தமிழீழக் காவல் துறைக் குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த புவனேஸ்வரன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழக் காவற்துறைக் குற்றப்புலனாய்வுப் பொறுப்பாளர் கானகன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு ஈகச் சுடரேற்றி, மலர்மாலை அணிவித்து மலர்வணக்கம் செய்தனர்.

முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு - மூங்கிலாற்றில் உள்ள மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தொடர்பகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், பொது ஈகச் சுடரை நவம் அறிவுக்கூடப் போராளி காசிம் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை ஜெயந்தன் படையணி நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் வர்மன் ஏறறினார். திருவுருவப் படத்துக்கான மலர்மாலையை உடையார்கட்டு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஜெயம் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.

கிளிநொச்சி பிரதேசசபை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் - பொதுஈகச் சுடரைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை வடபோர்முனைத் தளபதி வீரமணி ஏற்றிவைக்க, திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் பார்த்தீபன், குட்டிசிறி மோட்டார் படையணி மாவீரர் பவழுபுகழின் தாயார் க.புவனேஸ்வரி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மலர்வணக்கம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நினைவுரையை பொன்.தியாகம் நிகழ்த்தினார்.

கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர் நினைவு மண்டபத்தில், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் குமுதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பொதுஈகச் சுடரைப் போர்ப் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர் சின்னமணி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி கோபித் ஏற்றிவைத்தார்.

திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரை மாவீரர் மேஜர் மாருதியனின் தாயார் ஏற்றினார். மலர் மாலையை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர் நினைவாலயப் பொறுப்பாளர் தவக்குமார் அணிவித்தார். இந்த நிகழ்வின் நினைவுரையை சாள்ஸ் அன்ரனி படையணியின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாவலன் நிகழ்த்தினார்.

விசுவமடு மாவீரர் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் - பொதுஈகச் சுடரை அம்மன் மருந்தக உரிமையாளர் ஏற்றிவைகக, தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ரூபன் ஏற்றிவைத்தார். மூத்ததளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரை விசுவமடு வர்த்தக சங்கச் செயலாளர் ஏற்றி வைத்தார். மலர்வணக்கத்தைத் தொடர்ந்து, நினைவுரையைப் பிரதேசப் பொறுப்பாளர் ரூபன் நிகழ்த்தினார். இதேவேளை, வவுனியா செட்டிகுளம், சிதம்பரபுரம், வவுனியா நகர் உட்பட பல இடங்களிலும் இந்த நிகழ்வு உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஜனவரி 18**

1736 :- நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்த ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ்வார்ட் பிறந்ததினம்.

1871 :- ஐக்கிய ஜேர்மனி பேரரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1915 :- இருபத்தியொரு கட்டளைகள் எனக் குறிப்பிடப்படும் எச்சரிக்கைக் கடிதத்தை ஜப்பான் சீனாவுக்கு அனுப்பி வைத்தது இன்றாகும். இந்தக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படின் சீனா ஜப்பானின் கைப்பொம்மையாகவே ஆக்கப்பட்டு விடும் நிலையிருந்தும்கூட, இந்த வருடம் மே மாதம் 15 ஆம் திகதி இவற்றுள் பெரும்பாலானவற்றைச் சீனா ஏற்றுக்கொண்டது.

1917 :- கனடா நாடாளுமன்றம் முதன்முதலாக வருமானவரிச் சட்டத்தை நிறைவேற்றிய நாள் இன்றாகும்.

:- பிரிட்டனில் நடைபெற்ற வழக்கறிஞர் சங்க வருடாந்த மாநாட்டில் பெண்கள் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

1918 :- போரில் தீரச் செயல்கள் புரிந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வார் கிராஸ் ஒப் மெரிட் என்ற விருது இத்தாலியில் இன்றுதான் ஆரம்பிக்கப்பட்டது.

1943 :- புகழ்பெற்ற லெனின்கிராட் முற்றுகை நிகழ்ந்தநாள் இன்றாகும்.

1954 :- மலையகத் தமிழ்ச் சகோதரர்கள் தொடர்பான இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்ட தினம் இதுவாகும்.

1972 :- எச்.எம்.எஸ். வீல்ட்டன் என்னும் பிளாஸ்ரிக் போர்க்கப்பலின் வெள்ளோட்டம் செனற் ஹாம்ப்டனில் இன்று நடைபெற்றது.

1978 :- கம்போடியா மீது வியட்நாம் இன்று படையெடுத்த நாளாகும்.

1998 :- எலுமிச்சைச் சாற்றில் விற்றமின் சி இருப்பதை உறுதிப்படுத்திய சார்ள்ஸ் களன்சிங் இன்று காலமானார்.

தொகுப்பு சந்துரு

## சுனாமி அனர்த்தம் காரணமாக

# உயிரிழந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வமத தலைவர்களின் பிரார்த்தனை

(வவுனியா)

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக, உயிரிழந்த அனைத்து மக்களின் ஆத்ம அஞ்சலிக்காகவும், பாதிக்கப்பட்ட மக்கள் சுகம் பெறவும் விசேட பிரார்த்தனை வைபவம் நேற்றுமுன்தினம் வவுனியா சைவப்பிரகாச வித்தியா சாலை மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

சகல மதத் தலைவர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், அரசியல் பிரமுகர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

உலக சமய தினத்தை முன்னிட்டு, வவுனியா மாவட்ட சர்வமத ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் - முதலில் கடல் அனர்த்தம் காரணமாக உயிரிழந்த, பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வமதப் பிரார்த்தனை இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் மங்கள விளக்கேற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம், அட்டமஸ்கட கலியாண திஸ்ஸதேரோ, இறம்பைக்குளம் பங்குத்தந்தை அருட்திரு பிரான்சிஸ் மரிடிகோல், பட்டாணிச்சூர் பள்ளிவாசல் மௌலவி எம்.ஏ.சி.ஜாபீர் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

உலக சமயதினம் வருடத்தில் ஜனவரி மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை. இது ஐக்கியநாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.


சமயங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த விழா அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.


இந்த நிகழ்வில் சகல மதத் தலைவர்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும், அரசியற் பிரமுகர்கள், தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் எஸ்.என்.ஜி. நாதன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வன்னி மாவட்டத் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர் மகேஸ் தவச்செல்வம், வைத்திய கலாநிதி ரி.ஜெயதரன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

### தேசிய விளையாட்டுவிழா பிற்போடப்பட்டுள்ளது

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட துயரமான சூழ்நிலையை கவனத்தில் கொண்டு, 2005 பெப்ரவரி மாதம் நடைபெற இருந்த நான்காவது தமிழீழ தேசிய விளையாட்டு விழா - எதிர்வரும் ஜுலைமாதம் இரண்டாம் வாரத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது என, தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கி. பாப்பா தெரிவித்தார்.

தமிழீழ தேசிய எழுச்சி நிகழ்வுகளில் ஒன்றாக அமையும் இந்த விழாவை - சிறப்புற நடத்துவதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றனர்.





வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வமத தலைவர்களின் பிரார்த்தனையின்போது மங்கள விளக்கை மன்னார் மாவட்ட அரசு அதிபர் சி.சண்முகம் ஏற்றுவதையும், மாணவி ஒருவரின் வரவேற்பு நடனத்தையும், இந்த நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

திருக்குறள்

# நமது நோக்கு

## அவலம் நிறைந்த சூழலும்.... அரசின் ஆயுதக் கொள்வனவும்!

ஆழிப்பேரலை ஏற்படுத்திய நாசகார அழிவுகளால் தமது வாழ்வியல் செயற்பாடுகள் அனைத்தையும் முற்றாகவே இழந்து, நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்து, அங்கு தமது எதிர்காலம்குறித்த திட்டவட்டமான நம்பிக்கைகள் ஏதுமின்றி, உளநலம் பாதிக்கப்பட்டு வாழ்க்கையை விரக்திநிலையில் ஓட்டிக்கொண்டிருக்கும் கடலோர மக்களின் இயல்புவாழ்க்கை உடனடியாக மீளவும் ஏற்படும் சாத்தியக் கூறுகள் மிகமிகக் குறைவாகவே தென்படுகின்றன.

அதுவும் குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள் வாழும்பகுதிகளில் 'சுனாமி'யின் தாக்குதலுக்குள்ளானோரின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புதல் என்பது மிகவும சிரமத்திற்குரிய விடயமாகவே உள்ளது.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து மூன்று வாரங்களாகி விட்டநிலையில் - சர்வதேச சமூகத்தின் நிவாரண உதவிகள அரசுக்கு வந்துகுவிந்தவண்ணம் இருக்கும் சூழலிலும், கிடைக்கும் நிவாரணப் பொருட்கள் வடக்கு - கிழக்கு வாழ் சுனாமி பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களுக்கு நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கும் விடயத்தில்அரசு காட்டும் மெத்தனப் போக்கானது - அந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளை சரியான முறையில் மேற்கொள்ளப் பெருந்தடையாக உள்ளது என்றே கூறவேண்டும்.

அனர்த்தம் நிகழ்ந்து அழிவுகள் ஏற்பட்ட மறுகணமே மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இறங்கி, உயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட விடுதலைப் புலிகள், தன்னார்வத் தொண்டர் அமைப்புக்கள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றவை அர்ப்பணிப்புடன் - எந்தவிதமான அரச உதவிகளுமின்றி செயற்பட்ட போதிலும், அவர்களுக்கான உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கி நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டிய அரசாங்கம் இந்த அவலத்தையும் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் அநாகரிக உத்தியைக் கையாள முயன்றதால் - அர்ப்பணிப்புக்களை உரியமுறையில்துரிதகதியில் மேற்கொள்ள முடியாத நிலையே உருவாகிவிட்டுள்ளது.

அதாவது, நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பை ஜனாதிபதி ஆயுதப படையினர்வசம் ஒப்படைத்ததன்மூலம் நலன்புரி நிலையங்கள் ஆயுதப் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டதுடன், அங்கு நிவாரணப்பணிகளை மேற்கொண்டுவந்த விடுதலைப்புலிகள், தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினர், ஏனைய தன்னார்வத் தொண்டர் அமைப்புகளின் உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டிய சூழல் உருவானதுடன், பாதிப்புற்ற மக்கள் படைத்தரப்பினர் தொடர்பான அச்சம்காரணமாக நலன்புரிநிலையங்களில் இருந்து வேறு இடங்களுக்கு இடம் பெயரவும் வேண்டிய அவலம் ஏற்பட்டது.

நலன்புரி நிலையங்களில் இராணுவப் பிரசன்னமும், நிவாரணப் பணிகளில் படைத்தரப்பினரது செயற்பாடுகளும் சர்வதேச அமைப்புக்களால்கூட கண்டிக்கப்பட்டபோதிலும், அரசு தனது செயற்பாட்டில் இருந்து மாறவேயில்லை. இதே வேளை, அவசரகால நிலைமையை அரசு பிரகடனம் செய்துள்ளதால் நெருக்கடிகள் மேலும் அச்சமூட்டும் வகையில் அதிகரிக்கவே செய்துள்ளது.

மேற்குறித்த நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடுகளும், நலன்புரிநிலையங்களில் ஆயுதப் படைகளின் பிரசன்னமும், அவசரகாலநிலைப் பிரகடனமும் அடுத்தடுத்து ஏற்பட்டுள்ளநிலையில், சுமார் 1500 கோடி ரூபாய்களுக்கு ஈரானிலிருந்து ஆயுதக்கொள்வனவை அரசு மேற்கொண்டுள்ளது என்ற செய்தியும் வெளியாகியுள்ளதை வைத்துப் பார்க்கும்போது அரசு தமிழ் மக்களை மேலும் அச்சுறுத்தும் செயற்பாடுகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது.


இன்றைய அழிவும், அவலமும் நிறைந்த சூழலில் - இருப்பிடங்களை இழந்து, தொழில் உபகரணங்களை இழந்து தவிக்கும் மக்களின் வாழ்வை இயல்புநிலைக்குக் கொண்டுவர பல்லாயிரம் கோடி ரூபாய்க்கு சர்வதேச சமூகத்திடம் யாசிக்கும் நிலையில் உள்ள அரசு - அந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் காட்டும் அக்கறையை விடவும் இராணுவ நலன்களைப் பாதுகாக்கும் யுத்த இலக்குடனான ஆயுதக் கொள்வனவுக்கு 1500 கோடி ரூபாய்களைச் செலவிட முனைந்துள்ளதைப் பார்க்கும்போது அரசின் உள்நோக்கம் தெளிவாகப் புலப்படவே செய்கிறது.

பனையால் விழுந்தவனை ஏறிமிதித்து அழிக்கமுயலும் எருமைமாட்டின் தன்மையுடன் அரசு செயற்படுவதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிடுவதை நிராகரிக்க முடியாது என்பதுடன், நிவாரணப் பணிகளுக்கென வெளிநாடுகள் கொடுக்கும் நிதியை ஆயுதக் கொள்வனவுக்குப் பயன்படுத்துகின்றதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.

அரசின் இந்த நோக்கத்தைப் புரிந்துகொண்டுதான் போலும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலியானது, 'சுனாமி அனர்த்தத்தால் விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டதாக நினைத்து, அவர்கள்மீது இராணுவ நடவடிக்கையை அரசு எடுக்குமாயின் அது கடுமையானதும், பாதகமானதுமான எதிர்விளைவுகளையே ஏற்படுத்துமென கருத்துத் தெரிவித்துள்ளது என்றும் எண்ணத் தோன்றுவதும் தவிர்க்கமுடியாததே.

எவர் எது சொன்னாலும் எதனையும் கருத்தில் கொள்ளாது தன்னிச்சைப்படி நடக்கும் ஜனாதிபதியும், அவரின்கீழ் இயங்கும் பேரினவாத அரசும் - எவரது ஆலோசனையையும், அறிவுறுத்தல்களையும் ஏற்கப்போவதில்லை என்பதே உண்மையாகும். எல்லாம் பட்டுத்தான் தெளிய வேண்டும் என்ற தலை விதி அரசுக்கிருந்தால் யார்தான் அதைத் தடுக்கமுடியும்?

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அழிவுக்குப் பின்னும் அறிவு வரக்காணோமே...!

'எத்தனை சுனாமிப் பேரலைகள் வந்தாலும் இலங்கையில் சிங்களபௌத்த மேலாண்மைவாதிகளைத் திருத்தவே முடியாது'.

இப்படிச் சொல்லிக்கொண்டே அறைக்குள் நுழைந்தான் நண்பன்.

எதைவைத்து இப்படிச் சொல்லிக்கொண்டு வருகிறீர் என்று கேட்டேன்.

'தான் போகவழியைக் காணோம் 'மூஞ்சூறு விளக்கு மாற்றைக் காவிச்சுதாம்' என்றொரு பழமொழி இருக்குது தெரியுமா? என்றான் நண்பன்.

'நீர் யாரைச் சொல்லுகிறீர்? என்றேன்.

சுனாமிப் பேரலைகளைவிட மோசமான கொடூரமான கற்பனையை கொழும்பு அரச ஊடகங்களும் தனியார் ஊடகங்கள் சிலவும் அவிட்டுவிட்டதை நீர் அறிவீரல்லவா? என்றேன்.

அதுதான் அந்த ஊடகங்கள் அகில உலகத்திலும் சிரிப்பாய்ச் சிரிப்பதற்கு உள்ளாகியிருக்கின்றனவே' என்றேன்.

கடந்தவார ஆங்கிலப் பத்திரிகையொன்று இந்தச் செய்தி பற்றி நாட்டின் அம்மையார் இந்த அவுட்டாவை அவிட்டு விட்ட கடற்படைத் தளபதியிடம் அந்தப் புளுகு மூட்டையின அடுத்தகட்டம் பற்றி விசாரித்தாராம். அவர் எதுவும் சொல்ல முடியாமல் தடுமாறி நின்றதாக ஒரு கட்டுரையில் தெரிவித்திருக்கிறதே என்றேன்.

தாங்களே அவிழ்த்துவிட்டதை எப்படி முடிவுக்குக் கொண்டுவருவதென்று தெரியாமல் இப்பொழுது வேறு ஏதேதோ காரணங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்களாம். இது மட்டுமல்ல கோடரிக்காம்பு இது பற்றி நீண்ட அறிக்கையொன்று விட்டதாகவும் சொல்லியிருந்தார்கள்.

அந்தக் கோடரிக்காம்பு இருக்கிறதா, இல்லையா, எங்கே இருக்கிறது, அதுடைய பெயரில் யாராவது ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களா? என்பதற்கெல்லாம் விடை தெரியவில்லை. இதைத்தான் போகவழியில்லை மூஞ்சூறு விளக்கு மாற்றைக் காவின்கதை என்று சொன்னேன் என்றான் நண்பன்.

சிங்கள மக்களை இப்படி இன்னும் எத்தனை காலத்துக்கு ஏமாற்றி அவர்களை 'கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் இந்த ஊடகங்களும், அரசியல்வாதிகளும் வைத்திருக்கப்போகிறார்கள்? என்றேன்.

எத்தனை சுனாமிகள் வந்தாலும் இருபகுதியினரும் சிந்திக்கமாட்டார்கள் என்றான் நண்பன்.

1958 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டுவரை இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டு ஊழிக்கூத்து ஆடியபோதெல்லாம் இந்த சிங்கள - பௌத்த மேலாண்மை ஊடகங்களும் (அப்பொ ழுது குறைந்த வசதிகளுடன்) இனவெறியர்களும் மத வெறியர்களும் தங்கள் கொடூரச் செயல்களுக்கு மிகமோசமான புளுகுகளை அவிட்டுவிட்டே சாதித்தார்கள்.

பின்னர் நிலைமை சீரானபோது அவர்கள் அவிட்டுவிட்ட கொடூரக் கற்பனைகளை மக்கள் அறிந்துகொண்டார்கள். இது 1958 இற்குப் பின்னரும் 77 இற்குப் பின்னரும் அவர்கள் உணர்ந்தவைதான். 1983 இற்குப் பின்னர்தான் அந்தக் கற்பனையின் கொடுமைகளுக்கு தமிழ் இளைஞர்களிடமிருந்து எதிரொலி கிளம்பியதையும் அறிந்தார்கள். ஆனாலும், என்ன இப்பொழுதும்கூட இந்த அண்டப்புழுகுகளை அவர்கள் நம்புவதால்தானே இப்பொழுதும் அவர்கள் அதே முறையைத் தொடர்ந்துகொண்டிருக்கின்றனர் என்றான் நண்பன்.

உலக நாடுகளிலிருந்து இங்குவரும் தலைவர்களும், உதவியளிக்கும் நாடுகள், அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வந்து போகின்றார்கள், எல்லோரையும் சந்தித்தும் போகிறார்கள். ஆனால், அனர்த்தத்தில் பாதிப்புக்குள்ளாகி ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் அகதிகளுக்கு இவற்றைப் பராமரித்துப் பங்கிட்டளிக்கும் பொறுப்பை இராணுவத்திடம் ஒப்படைத்திருப்பதுபற்றி யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லையே என்றேன்.

இதில் இன்னொரு வேடிக்கையைக் கவனிக்கவில்லையா? என்றான் நண்பன்.

அகதி முகாம்களில் இன்று அநாதைகளான நிலையில் கையேந்திநிற்கும் தமிழ்பேசும் மக்களுக்கு அவர்களை அழித்தும், ஒழித்தும், அடக்கி, ஒடுக்கிப் பழகிப்போன சிறிலங்காவின் சிங்களப் படையினர் பராமரித்துப் பங்கீடு செய்வதற்கு விடப்படுகின்றார்கள். இதுபற்றி இந்த மக்களுக்காக அறிக்கைவிடும் சங்கூதிகளும், கூட்டாளிகளும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே ஏன்? என்றேன்.

இந்த ஏற்பாட்டுக்கு அவர்களும் உடந்தையாக இருப்பார்களோ என்னவோ? அது மட்டுமல்ல அனர்த்தத்தால் கணப்பொழுதில் அநாதையான மக்களுக்கு உடனடியாக ஓடிச்சென்று உதவியளித்த, விடுதலைப்புலிப் போராளிகளுக்கும் அவர்களை எந்தப் பாகுபாடுமின்றி உதவியளிக்குமாறு கூறியனுப்பிவைத்த தேசியத் தலைவருக்கும், பட்டினி கிடக்காமல் பார்த்துக்கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கும் மக்கள் நன்றி சொல்லிவிடக்கூடாதென்பதில இவர்களுக்கு அவ்வளவு அக்கறை என்றான் நண்பன்.

அதுசரி இந்தச் சுனாமிப் பேர்லைகளால் புலிப்படைகளுக்குப் பெரும் இழப்பு என்று அரசு ஊடகங்களும், அரசுத தலைவியேகூடப் பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். கடற்புலிகள் எல்லாவற்றையுமே இழந்துவிட்டதாகவும் சொல்கிறார்கள்.

இந்த அனர்த்தத்தின்பின் விடுதலைப்புலிகள் இனிப் போருக்குப் போகும் நிலையில் இல்லை. இனிமேல் போருககுப் போகமாட்டார்கள் என்றே ஆட்சி அதிகாரவர்க்கமும், ஊடகங்களும் சொல்லிக்கொண்டிருக்கின்றன. எதற்காகப் பிரசாரம் செய்கின்றன? என்றேன் நான்.

"உண்மைதான். அரசுத் தலைவியும்சரி அமைச்சர்சிலரும், அதிகாரிகளும், படைத்தரப்பிலுள்ளவர்களும்சரி தங்களின் புலனாய்வுத்துறை கொடுத்த தகவல்களின் அடிப்படையில்தானே இப்படிப் பிரசாரம் செய்யவேண்டும். எதிரி போருக்குப் போகும் நிலையில் இல்லை, போகவும் முடியாதபடி அனர்த்தம் அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளதென்றால் எதற்காக ஈரானுக்கு படைத்தளபதி குழு சென்று படைச்சாதனங்களையும், ஆயுதங்களையும் வாங்குவதவற்கு முனையவேண்டும்.

மீண்டும் ஒரு சுனாமி வந்தால் அந்தக் பேரலைகளுடன் போர்புரிவதற்கு சிறிலங்கா படைகள் தயாராகின்றனவா? பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கொண்டுவரும் அந்நியப் படைகளுடன் போருக்கு சிறிலங்காப்படைகள் ஆயத்தமாகின்றனவா?

உலக நாடுகள் யாவும் இயற்கை அனர்த்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக பொதுமக்களிடமிருந்து திரட்டிய நிவாரணப் பொருட்களையும் கொண்டு வந்து குவிக்கின்றன. பாதிக்கப்பட்ட அழிவுகளுக்குள்ளான இடங்களைப் புனரமைக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும், உலக நாடுகள் பணமாகவும், பண்டமாகவும் கொண்டு வந்து குவித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சிறிலங்கா அரசு ஆயுதங்கள் வாங்குவதற்கும் படைக்குழுவை அனுப்பி பேரம் பேசவும் ஆயுதங்கள் வாங்கவும் முயற்சி செய்யும்போது உதவி செய்யும் நாடுகள் இதுபற்றி மௌனம் சாதித்துக்கொண்டிருக்கப் போகின்றனவா? அல்லது தங்களிடமும் ஆயுதங்கள் இருக்கின்றன என்று கொடுப்பதற்கு முன்வருமா?

சிறிலங்கா படைஅதிகாரிகள் சிலர் வாங்கவேண்டிய ஆயுதங்கள் பற்றிய பட்டியல் தயாரித்தபோது மற்றும் சில அதிகாரிகள் இவை இப்பொழுது தேவையில்லையென்று கூறியதாகவும் ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது என்றான் நண்பன்.

சுனாமியின் கொடூரமும், அது ஏற்படுத்திய அழிவுகளின் எச்சசொச்சமும், துர்நாற்றமும் எல்லாம் கலந்தாகவே சிறிலங்கா அரசின் போக்குமிருக்கிறது என்றேன் நான்.

அழிவுக்குப் பின்னரும் அரசினதும் ஆதிக்க சக்திகளின் போக்குகளும், இங்குவரும் போர்க்கலங்களும் படைகளும் கூட மீண்டும் இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கு வழிவகுத்து விடுமோ? என்றபடியே நண்பன் வெளியேறினான்.

பகுதி XI

சங்கர்

**சுனாமி கடற்கொந்தளிப்பு பேரழிவு அனர்த்தம் வடக்கு – கிழக்கு கரையோர மக்களுக்கு ஏற்படுத்திய தாக்கங்கள் அழிவுகள் பற்றிய நேரடிப் பார்வைப் பதிவுகளும் அது குறித்த உணர்வுப் பகிர்வுகளும்...**

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

எமது வைத்தியசாலையும் அழிந்துள்ளது. மாளிகைக்காடு கிழக்கும், காரைதவின் 3, 4, 8, 9 ஆம் பிரிவுகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் விளைவாக 2200 பேர் பலியாகியுள்ளனர். 91 பேர் காணாமற்போயுள்ளனர். இங்கு இடம்பெயர்ந்தோர் நிவாரண நலன் புரிச் செயலணிக்குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட இந்தக் குழுவுக்கு மக்கள் வங்கி முகாமையாளர் ஜே.கே.பிரான்சிஸ் தலைமை வகிக்கின்றார். இங்கு தமழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, தமிழீழ சுகாதார சேவைகள் என்பன தம்மை முற்றாக அர்ப்பணித்துப் பணியாற்றி வருகின்றன.

இன்று இங்கு வந்துள்ள "சக்தி" நிறுவனம்போல தொண்டர் நிறுவனங்களும் பல்வேறு உதவிகளை வழங்கின. எனினும் அரசின் நிவாரணங்கள் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்றடைவதைவிட, பாதிக்கப்படாத பகுதிகளுக்குச் செல்வதுதான் பிரச்சினையாக

வந்து அடித்த அலையில் பாடசாலை இடிந்தது. அறநெறிப் பாடசாலை மாணவர்களை கடலலை இழுத்துச் சென்றதை நான் கண்டேன். பக்கத்திலிருந்த வீட்டு மதிலால் ஏறிச் சென்றமையால் நான் உயிர்தப்பினேன்'

**2. எம்.ஐ.எம் மீராசாய்வு (வயது 45 சாய்ந்தமருது 2ஆம் குறிச்சி - பாலிகா வித்தியாலயம் என அழைக்கப்படும் முகமட் மகளிர் கல்லூரியில் தங்கியிருந்தவர்)**

என்ட பிள்ளைகள் முகமது றிஸ்வான் சித்தி றினாஜா, பாத்திமா றிஸ்ஸா, முகமது றிஸ்வான் மூணு பேரையும் தண்ணி அடிச்சிட்டு அப்பிடியே போயித்து. நான் தண்ணியில சுழிச்சுப் பூந்து, ஒரு தென்ன மரத்தில் கட்டிப்புடிச்சுத் தபபினன். பிள்ளைகளுமில்ல, ஒண்டுமில்ல. எந்த வித சாமானும் எடுக்கலல. மரத்தில் புடிச்சு எல்லா இடமும் எனக்கு காயம்.

3. **பல்கீஸ் (அதே முகாமில் தங்கியிருந்தவர்)**

எங்கட வீட்டில எங்கட மச்சான்

டடம இடிந்து வீழ்ந்தது. அந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் அகப்பட்டுக் கொண்ட நான - அடுத்த அலை அடித்த வேகத்தில் ஒரு கட்டை ஒன்றைப் பிடித்துக் கொண்டு தப்பினேன். இந்தச் சம்பவத்தில் உயிர்தப்பிய ஒரேயொரு ஆசிரியை நான்தான்.

கண் இமைக்கும் நேரத்தில் எல்லாம் முடிந்து விட்டது. பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் அறநெறிப் பாடசாலைக்குச் சென்ற 42 மாணவர்களும், ஆசிரியர்களும் மாமாங்க வித்தியாலயத்தில் 75 மாணவர்களும், 07 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளனர்.

காரைதீவு வைத்தியசாலையில் கடமையாற்றிய டொக்டர் பிரமவர்த்தனாவின் தாயார் நீருடன் அடித்துச் செல்லப்பட்டார். அவரது மோட்டார்கார் ஒரு மூலையில் கிடக்கிறது. இங்கு கடமையாற்றிய ஒரு குழந்தையின் தாயாரான திருமதி வதனி அருட்பிரகாசம் என்ற தாதி, 200 மீற்றருக்கு அப்பால் பலியாகிக் கிடந்தார்.

6. அட்டாளைச் சேனையில் முஸ்லிம் யுவதியொருவரை காப்பாற்றச் சென்ற, ஒன்றரை வயதுக் குழந்தையின் தந்தையான 30 வயதுடைய பேரின்பம் என்னும் தமிழ இளைஞரும் நீரில் அடித்துச் செல்

வுள்ளது. எனினும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தன்னாலான பணிகளைச் செவ்வனே ஆற்றுகினறது. அம்பாறை மாவட்டத்தில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் இருந்தும், அவர்கள் தமிழ்ப் பகுதிகளை மாற்றாநதாய் மனப்பான்மையுடன் நோக்குகின்றனர. எதிர்காலத்தில் இந்தப் போக்கை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம். ஏனெனில் அழிவுகள் இனம், மதம் பார்த்து நடைபெறவில்லை. இந்த வடயத்தில் எமது தேசியத் தலைவர் சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் ஒரே மாதிரிப் பணியாற்ற வேண்டும் என எம்மைப் பணிததுள்ளார். அதை மனதில் கொண்டே எமது நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

காரைதீவில் பாதிப்புற்றோரில் அனேகமானோர் - குறைந்தது இரு குடும்ப அங்கத்தவர்களை இழந்துள்ளனர். இதனால் இவர்கள் உளப் பாதிப்படைந்துள்ளனர். இதிலிருந்து இவர்களை மீட்கும் பணியும் எமக்கு முதன்மையாகவுள்ளது. கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளிலிருந்து வந்த ஆசிரியர்கள் இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்துச் செயற்பட்டனர்.

நாம் எதிர்நோக்கும் மற்றொரு பிரச்சினை - சுகாதாரப் பிரச்சினையாகும். இது சம்பந்தமான அறிவுறுத்தல்களை எமது சுகாதாரப் பிரிவு, மக்களுக்கு விடுப்பதுடன் மேற்கொண்டு சுகாதார விடயத்திலும் கூடிய கரிசனையுடன் செயற்படடு வருகின்றனர். எமது மக்களை, அவர்கள் அடைந்துள்ள பாதிப்புக்களிலிருந்து மெல்ல மெல்ல விடுத்தித்து, பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தும்வரை எமது பணி தொடரும்" எனக் குறிப்பிட்டார் றோமியோ.

காரைதீவு மற்றும் கல்முனையில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் மத்ரஸாவில் குர்ஆன் ஓதச் சென்ற மாணவர்கள் பலியாகியிருப்பது அனைவரின் மனதிலும் தாக்கத்தை எற்படுத்தியுள்ளது. காரைதீவு மற்றும் கல்முனைப் பகுதிகளில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக நாம் கண்டு, கேட்டு அறிந்த பல்வேறு விடயங்களில் சிலவற்றை பார்ப்போம்.

**- சின்னத்தம்பி குகன் (வயது 14)**

7 வயதான எனது தங்கை யதுஷினியை கடல் கொண்டு போய் விட்டது. அவளுக்கு கொப்பி கொடுப்பதற்காக பாண்டிருப்பு மகாவிஷ்ணு மகாவித்தியாலய அறநெறிப் பாடசாலைக்குச் சென்றிருந்தேன். கடலலையைக் கண்டு பாடசாலைக்குள் ஓடினேன். திடீரென



இல்ல. கையில இருந்த என்ட பிள்ளை இல்ல. எங்கட சாதி, சனங்களுக்கெல்லாம் காயம், வாட்டு வழிய இரிக்கி. எங்கள மண்ணு, மனை, சாமான் சக்கெட்டு பொருள் எல்லாம் ஒண்டுமே இல்ல, நாங்கள் எங்கட புள்ளகளையும் இழந்து, பொருளுகளையும் இழந்து இந்த பாலிகா ஸ்கூலல வந்து இரிக்கம். எங்களுக்கு ஒரு ஆதரவும் இல்ல, நாங்கள் எங்கயாவது, கமபையாவது எடுத்து ஆரார்ட வீட்டிலையாவது இருந்து ஒரு வளவுக்க குடில் ஒண்ட வைப்பமெண்டு பாத்தா, எங்களுக்கு ஒண்டுமேயில்ல. நாங்கள் என்ன செய்ய? ஆரிட்டச் சொல்லியழ? கையிலிருந்த எண்ட புள்ளக்கி பேர் முஸ்வா. ஓடியந்த எண்ட மச்சானுக்கு பேர் காதர். ரெண்டு பேரையும் காண இல்லே.

4. **எஸ் நிமாலினி (மாமாங்க வித்தியாலய அறநெறிப பாடசாலை ஆசிரியை - வயது 22)**

சம்பவதினம்175 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், 9 ஆசிரியர்களும் எமது அறநெறிப் பாடசாலைக்கு சமூகமளித்திருந்தனர். இதில மாணவர் தொகை வழமையை விட அதிகம். ஏற்கனவே நடைபெற்ற பரீட்சைகளின் விடைத்தாள்களை திருத்தும் பணியிலும், அறநெறிப் பாடசாலையின் ஆண்டுவிழாவுக்கான நிகழ்ச்சிகளைப் பழக்குவதிலும் ஆசிரியர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். 'திடீரென' கடலலை வருகிறது ரீச்சர் எழும்பிப் பாருங்கோ' என்று கூறியபடி குழந்தைகள் அதனை வேடிக்கைபார்த்தனர்.

கடலலை எமது பாடசாலையை நோக்கி வேகமாக வந்தது. அவ்வேளை சிலர் அலறி அடித்துக் கொண்டு வீதியோரமாக ஓடத் தொடங்கினர். இதன் பிறகு எமது பிளளைகளும் அம்மா, அப்பா என்றவாறு கத்திக் கொண்டு ஓட முயன்றனர். நாங்கள் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு ஓட முயற்சிக்கும் வேளை, அலை வந்து எம்மைத் தாக்கவே, நாங்கள் இருந்த கட்

லப்பட்டார். இவரது சடலம் -02-01-2005 ஞாயிற்றுக்கிழமை (8ஆம் நாள) அட்டாளைச் சேனை கோணாவத்தை ஆற்றில் கரையொதுங்கியது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த இவரது சடலம் இறுதியாக அணிந்திருநத உடை, கையில் கட்டியிருந்த கடிகாரம் என்பவற்றின் மூலமே அடையாளம் காண முடிந்தது. சம்பவம் நடந்த அதே இடத்திலேயே 8ஆம் நாள் சடலம் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது.

7. கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டோரில் 17 பேர் மூச்சுத்திணறல் நோயால் பாதிக்கப்பட்டு, கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இடம் பெயர்ந்தோர் முகாம்களில் இருந்து வயிற்றோட்ட நோயால் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்படட பொன்மணி (வயது 78) பெரிய கல்லாறு, சிவாமியம்மை (வயது65) காரைதீவு, ஆகியோர் மரணமாகினர். மேலும் எண்மர் வாந்திபேதியால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நிந்தவூரில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர - ஆறு இடம் பெயர்ந்தோர் முகாமகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்த வைத்தியசாலை அல்கஸ்ரன் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. அம்பாறை மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சலீம் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார். இவரது இல்லம் அழிந்துள்ளது. அருகிலுள்ள பள்ளிவாசலுக்கு அருகாமையில் இருந்த குர்ஆன் மத்ரசாவில் இருந்த நாற்பது சிறார்கள்', கதீப் ஆகியோர் ஆழிப் பேரவையில் அள்ளுண்டு போயினர்.

(தொடரும்...)

அரசியல்...

சிலம்பு

# மாறும் நிலைமைகளும் தடுமாறும் அரசாங்கமும்





சிலரைப் பல காலம் ஏமாற்றலாம், பலரைச் சிலகாலம் ஏமாறறலாம் எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற முடியாது என்பது உண்மைச் சொற்றொடராகும். சிங்கள அரசுகள்

> **அரசு - புலிகள் சமாதான உடன்படிக்கையும், ஆறு முறை நடந்த பேச்சுவார்த்தையும், தமிழர்களின் நிலைபற்றியும், சிங்கள ஆட்சிகளின் போக்குப் பற்றியும் தெரிந்து கொள்ள வழிவகுத்தன எனலாம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கூட்டமைப்பு ஏற்படட பின் நடந்த அரசியல் போலத்தனங்கள் தற்பொழுது உதவி வழங்கும் நாடுகளை விழிப்படைய வைத்துள்ளன.**
>
> **ஜே.வி.பி.யின் இனத்துவேசக் கொள்கைகள் சமாதான முன்னெடுப்புக்களை நகரவிடாது செய்துள்ளமையை அந்த நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. இதை அந்த நாடுகள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளன. இதற்கு ஜே.வி.பி மறுத்தான அடித்தும் அது பலன் கொடுக்கவில்லை.**

தொடர்ந்து தமிழ்த் தலைமையை ஏமாற்றியே வந்துள்ளன. இன்று அநத நிலை மாற்றமடைந்துள்ளது. தமிழ்த் தலைமையை ஏமாற்ற முடியாமல், சிங்கள அரசு தடுமாறிக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்கள் ஆயுதமின்றிப் போராடிய காலத்தில் உலக நாடுகளில் பெரிய அளவில் தமிழ் மக்களது பிரச்சினை தெரியவரவில்லை. தமிழ் நாட்டில் கூட அரசியல் தலைவர்கள் தெரிந்து வைத்திருந்தளவு மக்களிடம் அது போய்ச்சேரவில்லை. தமிழ் நாட்டு அரசியலில் ஏறபட்ட மாற்றமும், அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா தலைமையில் இருந்த காரணத்தாலும், தமிழ் உணர்வு அப்பொழுது மேலோங்கி இருந்ததாலும், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை கொஞ்சம் கூடுதலாக மககளிடம் சென்றடைந்தது. ஆனால் ஆயுதப் போராட்டம் வளர்ந்த பொழுது, உலக நாடுகள் இதனை வேறு கண்கொண்டே பார்த்தன.

தமிழினம் தன் உயிர் வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கையில், சிங்களம் இதை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாகக் காட்டியது. அரசியல் களத்தில் இருந்த தமிழ் தலைமை ஆயுதப் போராட்டத்தைப் பற்றிச் சரியான கருத்தை - உலக நாடுகளின் முன்வைக்கத்தவறிவிட்டது. போராளிகளின் தாக்குதல்களால், நடவடிக்கைகளால் பாதிக்கபபட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவோ, நடவடிக்கைகளைக் கண்டிக்கவோ தமிழ் அரசியல் தலைமை தவறிவிட்டது. ஆனபடியால், தமிழ்த் தலைமையும் ஆயுதக் கலாசாரத்துக்குத் துணை போகிறது என்று அரசு குற்றம் சுமததியது. இதற்குப் பயந்து போராளிகளின் நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபமும் தெரிவிக்கத் தலைபபட்டன தமிழ்த்தலைமைகள. இவ்வாறான இவர்களது நடவடிக்கை சிங்கள அரசுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. அவர்கள் தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை, உரிமைப்போராட்டத்தை வெறும் பயங்கரவாதமாக உலகெங்கும் எடுத்துச் சென்று வெற்றியும் பெற்றார்கள். அரசியல் தலைமை உரிமைப் போராட்டம் பற்றிய உண்மைத் தன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டத் தவறியமையே, அரசின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

போராட்டம் உலகமயமாகிய பின் இதர நாடுகள் அனுசரணையாளர்களாக அழைக்கப்பட்ட பின்பு, நிலைமையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அதேநேரம் தற்போது தமிழ் அரசியற் தலைமையும் சரியான வழியைப் பின்பற்றத் தொடங்கியுள்ளது.

அரசு - புலிகள் சமாதான உடன்படிக்கையும், ஆறு முறை நடந்த பேச்சு வார்த்தையும், தமிழர்களின் நிலைபற்றியும், சிங்கள ஆட்சிகளின் போக்குப் பற்றியும் தெரிந்து கொள்ள வழிவகுத்தன எனலாம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கூட்டமைப்பு ஏற்படட பின் நடந்த அரசியல் போலத்தனங்கள் தற்பொழுது உதவிவழங்கும் நாடுகளை விழிப்படைய வைத்துள்ளன. ஜே.வி.பி.யின் இனத்துவேசக்கொள்கைகள் சமாதான முன்னெடுப்புக்களை நகரவிடாது செய்துள்ளமையை அந்த நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. இதை அந்த நாடுகள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளன. இதற்கு ஜே.வி.பி மறுத்தான அடித்தும் அது பலன் கொடுக்கவில்லை.

இந்தப் பின்னணியில் 2005 ஆம் ஆண்டை 'மறு காலணியாக்க' எதிர்ப்பு ஆண்டாக வெளிப்படுத்தியுள்ளனர் ஜே.வி.பியும், தேசப்பற்றுள்ள இயக்கமும். முன்பு குடியேற்றவாதம் என்றும், பின்னர் புதிய குடியேற்றவாதம் என்றும் இருந்ததைப் போல், தற்பொழுது 'மறுகுடியேற்றக் கருத்து' என்ற சொலலைப் பயன்படுத்துகின்றனர்.

அதாவது ஆட்சியதிகாரங்களில் அந்நியத் தலையீட்டைச் செய்த தமது நலன்களை எய்துவதே மறு காலனித்துவம் என்று பொருள் கொள்கிறாரகள். இதன் உண்மைத் தன்மை என்னவென்றால் - தமிழ்மக்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்படுவதற்கு ஜே.வி.பியின் போக்கே காரணம் என்று வெளிநாடுகள் வெளிப்படையாகத் தெரிவித்தமையேயாகும். இந்த வெளிப்பாடு ஜே.வி.பிக்கு கசப்பாகிவிட்டது. எனவேதான், ஆட்சி அதிகாரங்களில் அந்நியத் தலையீடு ஏற்படுகிறது. இதைத்தடுக்க வேண்டும் என்று குரல் எழுப்புகின்றனர் அவர்கள். அதுமட்டுமல்ல கட்சியின கொள்கைகளிலும் கருத்துத் தெரிவிக்கின்றார்கள் என்ற கண்டனமும் எழுந்துள்ளது. இவ்வாறான வெளிநாடுகளின் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாதவர்கள் சிங்கள மக்களை இனவாதத்துக்குத் தூண்டி விடுவதற்கான மாற்று வழிகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

சமாதானகாலம் என்று கூறப்படும் இந்தக் காலத்தைப் புலிகள் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்றுதான் கூறவேண்டும். பேச்சுக்கள் தடைப்பட்டமைக்கான காரணங்கள், தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறு, அரசு சரியான தீர்வுக்கு வரமுடியாமலுள்ள காரணங்கள், எதிர்க்கட்சியின் நிலை என்பன பற்றிச் சரியான விளக்கங்களைப் புலிகள் வெளிநாடுகளுக்குச் சென்று விளக்கியிருந்தார்கள்.

தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பு, தமிழ் அரசியல் தலைமையும், புலிகளும் ஒரே இலட்சியத்தில் உள்ளமை சிங்களததின் கபட நாடகத்தை உலகறிய வைத்துள்ளது. புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவிரும்புபவர்களல்ல, போரே அவர்களது விருப்பு என்ற ஆட்சியாளரின் கருதது எடுபடாமல் போயுள்ளது. இது தமிழ் மக்களுக்கு நீண்ட காலத்தின் பின்பு கிடைத்த ஓரளவு வெற்றியாகும்.

தமிழ் மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் பற்றிய தங்கள் நிலைப்பாடு என்னவென்று இதுவரை கூறாமல், காலத்தை இழுத்தடிப்பதில் அரசு உள்ளது. இடைக்காலத் தன்னாட்சி அதிகார அலகு என்றால் தனிநாட்டுக்கான வரைவு அது என்று ஜே.வி.பி உளறுகின்றது. இந்த அலகு பற்றியும், நிரந்தரத் தீர்வு பற்றியும் சமாந்தரமாகப் பேசுவோம் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் காணப்படவில்லை. நிரந்தரத் தீர்வு எதனடிப்படையில் நடைபெறவேண்டும் என்ற தெளிவான கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. தமிழர்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் பேசலாம் என்று சந்திரிகா தெரிவிப்பாரானால் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. அதற்குச் சிங்களம் தயாராக இல்லை.

(தொடரும்...)

## ஆப்கான் கைதிகள் 80 பேர் அமெரிக்கப் படையால் விடுதலை

(வொஷிங்ரன்)

அமெரிக்க இராணுவச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆப்கான் கைதிகளில் 80 பேரை அமெரிக்க இராணுவம் விடுதலை செய்துள்ளதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 2001 ஆம் ஆண்டு ஆப்கானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்தக் கைதிகள் அனைவரும் அமெரிக்கத் தளமான பக்ராமிலிருந்து தலைநகர் காபூலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் தெரிவித்தார்.

இந்த 80 கைதிகளும் அமெரிக்கத் தளமான பக்ராமிலிருந்து, தலைநகர் காபூலிலுள்ள உயர் நீதிமன்றுக்கு இரண்டு பஸ்களில் கொண்டுவரப்பட்ட நிலையில் ஆப்கான் அதிகாரிகள் இவர்களைப் பொறுப்பேற்றனர். பின்னர் இவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அமெரிக்கப் படையினரால் 500 இற்கும் மேற்பட்ட தலிபான் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களது பிரதான தளங்களான பக்ராமிலும், கந்தகாரிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களை அமெரிக்கப் படையினர் சித்திரவதைகள் செய்வதாக மனித உரிமை அமைப்பு கடந்த வாரம் குற்றஞ் சாட்டியதுடன் அமெரிக்கப் படைகளால் ஆப்கான் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றிய ஆகப்பிந்திய தகவல்களையும் வெளியிடுமாறு கேட்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கில் நடந்த தாக்குதல்களில் 7 படையினர் உட்பட 15 பேர் பலி!



ஈராக்கின் இருவேறு இடங்களில் கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் ஈராக்கிய படையினர் உட்பட 15 பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் வடபகுதி நகரான பாய்ஜியில் கார் மூலமான தற்கொலைத் தாக்குதலாக பொலிஸ் நிலையத்திற்கு வெளியே நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது தாக்குதல் ஈராக்கின் மத்திய பகுதியான சுனி முஸ்லிம்களின் பகுபா நகரில் அமைந்துள்ள படையினரின் காவலரண்மீது நடத்தப்பட்டதில் ஏழு படையினர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரென எண்மர் கொல்லப்பட்டனர்.

பகுபாவில் தொடரும் தாக்குதல்களால் ஈராக்கில் நடைபெறும் தேர்தலில் மக்களின் பங்களிப்பு இல்லாமல்போகும் நிலை உருவாகலாமென அமெரிக்க மற்றும் ஈராக்கிய அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, ஈராக்கிலிருந்து வெளியேறி பல்வேறு நாடுகளில் தங்கியுள்ளவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக அமெரிக்கா, பிரிட்டன், ஜோர்தான் உட்பட 14 நாடுகளில் தேர்தல் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிலிருந்து வெளியேறியோரில் 4 மில்லியன் மக்கள் வாக்களிக்க தகுதியுடையவர்களென தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தேர்தல் நடைபெறும் தினங்களுக்கான பாதுகாப்பு நடைமுறைகளை ஈராகிய இடைக்கால அரசு அறிவித்துள்ளது. இதன்படி தேர்தல் நடைபெறும் தினத்திலிருந்து முதல் மூன்று நாடகள் விடுமுறையாகவும், வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் கார் செல்லவும் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆபத்தான பகுதிகள் எனக் கருதப்படும் இடங்களிலுள்ள வாக்காளர்கள் தேர்தல் தினமன்றே பதிவு செய்யப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்களெனவும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க படையினரின் பின்புல ஆதரவுடன் ஈராக்கின் ஒரு இலட்சம் பொலிஸார் தேர்தல் நிலையங்களுக்குப் பாதுகாப்பு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சாயோ ஷியாங் நேற்று மரணம்!




(பீஜிங்)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் சாயோ ஷியாங் (வயது 85) நேற்று பீஜிங்கிலுள்ள மருத்துவமனையில் காலமானார். சுகவீனமடைந்த இவர், கடந்த வெள்ளிக்கிழமை பீஜிங் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு அவர் கோமா நிலையை அடைந்த நிலையில் நேற்று காலமானார்.

இவரின் உயிரிழப்பு புதிய கிளர்ச்சிவாதிகளைத் தோற்றுவிக்கலாம் என்ற அச்ச நிலையையடுத்து கடந்த சில நாட்களாக சீனாவில் கடுமையான பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 1989 ஆம் ஆண்டு தியன்மென் சதுக்கத்தில் நடைபெற்ற ஜனநாயக ஆதரவு கோரிய போராட்டத்தை ஆதரித்தவர் எனத் தெரிவித்து கைதுசெய்யப்பட்ட இவர் - அன்றுமுதல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

## உலக நோக்கு


## காளை அடக்கும் போட்டியில் 5 பேர் பலி! பலர் படுகாயம்!



பொங்கல் தினத்தையொட்டி தமிழ்நாட்டின் பல பகுதிகளில் தற்போது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் காளை அடக்கல் போட்டியில் பங்குகொண்ட வீரர்களையும், பார்வையாளர்களையும் காளைகள் முட்டிமோதியதால் ஐந்துபேர் பலியானதுடன் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அலங்கநல்லூரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காளை அடக்கும் போட்டியில் செந்தில்குமார் (வயது 29), சுதாகர் (வயது 24) ஆகிய இரண்டு வீரர்களும், போட்டியைக் காணச் சென்ற மார்னாடு (வயது 29) என்பவரும் காளைகள் மோதியதில் பலியாகினர். அத்துடன் இங்கு காளைகள் முட்டி மோதியதில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இதனையடுத்து மஞ்சுவிரட்டு எனும் பகுதியில் இடம்பெற்ற காளை அடக்கும் போட்டியில் காளைகள் முட்டியதில் நாச்சியப்பன் (வயது 40) என்பவர் உயிரிழந்ததுடன், 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.



திருச்சி மாவட்டம் மணப்பாறையில் நடந்த காளை அடக்கும் போட்டியில் பிரபு (வயது 17) என்ற மாணவர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இதுதவிர ஆவாரங்காட்டில் 85 பேரும், வேங்கை குறிச்சியில் 15 பேரும், திண்டுக்கல்லில் 127 பேரும் இந்தக் காளையடக்கும் போட்டிகளில் படுகாயமடைந்தனர். இந்தக் காளை அடக்கும் போட்டிகளில் காளைகளை அடக்கிய வீரர்களுக்கு தங்கக்காசுகள், சில்வர் பாத்திரங்கள், வேட்டிகள், பணமுடிப்புகள் என்பன பரிசாக வழங்கப்பட்டன. அத்துடன் அடங்கமறுத்த காளைகளின் உரிமையாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வீரப்பன் சமாதியில் நிறுவப்பட்டுள்ள சிலை



(மேட்டூர்)

மேட்டூர் மூலக்காட்டில் உள்ள சந்தனக் கடத்தல் வீரப்பன் சமாதியில் 3 அடி உயரத்தில் வீரப்பன் சிலை கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அமைக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் அங்கு வீரப்பன் சிலையை வைத்ததாகத் தெரிகிறது. மேலும் வீரப்பனுக்குக் கோயில் அமைக்கவுள்ளதாகவும் சிலர் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு வந்த பொதுமக்களில் சிலர் வீரப்பன் சிலைமுன் மண்டியிட்டுக் கும்பிட்டுச் சென்றனர். சுற்றுலாப் பயணிகள் சிலையின் அருகில்நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

மேட்டூர் நீர்த்தேக்கத்தை ஒட்டியுள்ள பகுதியில் வீரப்பன் சமாதி உள்ளது. இந்த நிலம் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானதாகும். எனவே, அங்கு கோயில் கட்ட பொதுப்பணித் துறையினரின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கும்.

சிலையில் உள்ள துப்பாக்கியில் 'நன்மையே செய்' என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. சிலையில் கூர்மையான வாள் சொருகப்பட்டுள்ளது. சிலையின் இடுப்பில் மஞ்சள் துண்டு கட்டப்பட்டுள்ளது. சிலைக்குப் பின்னால் கரும்பு வைக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் விசேட படையினர் ஈரானின் முக்கிய இடங்கள் குறித்த தகவல்களை திரட்டி வருகின்றனர்!

### புலனாய்வு செய்தியாளர் தகவல்



(தெஹ்ரான்)

ஈரானில் எதிர்காலத்தில் விமானத் தாக்குதல் நடத்தப்படவுள்ள இடங்கள் தொடர்பான விபரங்களை ஈரானுக்குள் ஊடுருவிய அமெரிக்காவின் சிறப்பு கொமாண்டோ பிரிவு திரட்டிவருவதாக அமெரிக்காவின் புலனாய்வுச் செய்தியாளரான சீமர் ஹேர்ஸ் தனது கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

புலனாய்வு அதிகாரிகளின் தகவல்களின் படி அமெரிக்க நிர்வாகத்தின் அடுத்த இலக்கு ஈரானாகும். அமெரிக்காவின் விசேட படையினர் தமது வேவு நடவடிக்கைகளை கடந்த ஆறுமாதங்களாக ஈரானுக்குள் மேற்கொண்டு வருகின்றனர். அங்கு ஊடுருவிய அவர்கள் ஈரானில் மறைவான பகுதிகளிலுள்ள இலக்குகள் மற்றும் ஏவுதளங்கள், அணுவாயுத தளங்கள் போன்றவை பற்றிய விபரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

கடல்கடந்து ஊடுருவி தகவல்களை திரட்டும் படையினர் அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்காதவாறு செயற்படுமாறு அதிபர் புஷ் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஆப்கானிலிருந்து ஊடுருவிய இந்தப் படையினர் ஈரானின் கிழக்குப் பகுதியில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்க விசேட படையினர் மத்திய கிழக்கு மற்றும் தென்னாசியாவிலுள்ள பத்து நாடுகளில் தமது வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஹேர்சின் இந்தக் கட்டுரை ஆதாரமற்றதென அமெரிக்க தொலைத் தொடர்பு பணிப்பாளர் டன் பட்லெட் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது-

இராஜதந்திர செயற்பாடுகளுக்கு தற்போது முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. சுமுகமான சூழ்நிலை உள்ளபோது எந்தவொரு ஜனாதிபதியும் தனது வரலாற்றில் இராணுவ நடவடிக்கையை தெரிவு செய்யவில்லை. அதிபர் புஷ்ஷும், நாமும் தற்போதைய இராஜதந்திர செயற்பாடுகள் சரியான பாதையில் செல்வதாகவே உணர்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## கண்ணிவெடியை கண்டுபிடிக்க எலிகளும் உதவிசெய்கின்றன!

உலகின் 60 நாடுகளில் 10 கோடி கண்ணிவெடிகள் பரவிக்கிடக்கின்றன. இதனால் தினமும் 50 பேர் பலியாகிறார்கள் அல்லது காயமடைகிறார்கள்.

இதில் அதிகம் பாதிக்கப்பட்டவை ஆபிரிக்க நாடுகள்தான். ஆபிரிக்காவில் உள்ள மொசாம்பிக்கில் உள்நாட்டுச் சண்டையின் போது கண்ணிவெடிகள் அதிகளவில் பதிக்கப்பட்டன. 1992 முதல் சண்டை ஓய்ந்துவிட்டபோதிலும் கண்ணிவெடிகளை அகற்றுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தினந்தினம் அப்பாவிகள் பலியாகிவருகின்றனர்.

மெட்டல் டிடக்டர் மூலம் கண்ணிவெடிகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமானது. 2 ஆவது உலக யுத்தத்துக்குப் பிறகு நாய்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. பூமிக்குக் கீழே 15 முதல் 20 செ.மீ ஆழத்தில் பதிக்கப்பட்ட கண்ணிவெடிகளை மெட்டல் டிடக்டரால் கண்டுபிடிக்கமுடியாது. அவற்றை நாய்கள் கண்டுபிடித்துவிடும்.

இப்போது மொசம்பிக்கில் எலிகளும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றன. இவை ராட்சத ஆபிரிக்க எலி வகையைச் சேர்ந்தவை. இவை 'காம்பியன் ஜெயண்ட்' என அழைக்கப்படுகின்றன.

வியாங்குலாஸ் என்ற கடலோர நகரில் இந்த எலிகள் கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் வல்லமையை சுனாமி வெளிப்படுத்தியுள்ளது!

## பிரான்ஸ் பத்திரிகை தெரிவிப்பு

இலங்கையில் தனிநாடுகோரி போராடி வரும் விடுதலைப்புலிகள் சுனாமி அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களைப் பாது காத்து, பராமரிக்கும் வல்லமையை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்று பிரான்சின் பிரபல பத்திரிகை யான லீ மொன்டே தெரிவித்துள் ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அகதிமுகாம்கள் அமைத்து, பாதிக் கப்பட்ட மக்களை அங்கு தங்க வைத்தார்கள். அதற்கு அப்பால் பாதுகாப்பு அரண்களை அமைப்ப தற்கான முன்னேற்பாடுகளைச் செய்தார்கள்.

வாகனங்களில் காயப்பட்டவர் களை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு இரத்தம் வழங்குவதிலும் அவர்கள் முன் நின்றார்கள். ஒளிப் பதிவுக் கருவிகள் மூலமும், கணி னிகளின் மூலமும் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து கண்டெடுக்கப் பட்ட இறந்தவர்களின் முகங்க ளைப் புகைப்படம் எடுத்தார்கள்.

அவற்றை அடையாளம் காண் பதற்காக ஆவணப்படுத்தினார்கள். அதன் பின்னர் இறந்தவர்களின் உடல்களை எரிக்கும் பணிகளிலும் மும்முரமாக ஈடுபட்டார்கள். அவர் களின் இராணுவம் நன்றாக வேலை செய்யும் திறன்மிக்கது என பிரித்தானியாவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் கூறினார்.

விடுதலைப்புலிகள் நிவாரண உதவிகள் கிடைக்க வேண்டுமென் பதில் அக்கறையாக இருந்தார்கள்.

1983ஆம் ஆண்டில் இருந்து நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடி வருகி றார்கள். அங்கே சிறுபான்மையினத் தவராக தமிழ் மக்கள் இருக்கின் றார்கள். சிங்களவர் பெரும்பான்மை யினத்தவராக இருக்கின்றார்கள்.

2002ஆம் ஆண்டில் இருந்து போர் நிறுத்தச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனினும் சுனாமி அனர்த்தம் இரண்டு முனை களுக்கிடையிலும் ஒரு சமாதா னத்தை ஏற்படுத்துவதற்குச் சாத கமான வாய்ப்பாக அமைந்துள் ளது.

இதன் மூலம் சமாதானப் பேச் சுக்கள் உருவாகி இலங்கையில் ஒரு மாற்றம் நிகழலாம் என்று இந் தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

# சிறப்புற நடைபெற்ற பொங்குதமிழ் நான்காம் ஆண்டு நிறைவுவிழா!

யாழ். பல்கலைக்கழக சமூகத் தால் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் பொங்குதமிழ் நிகழ்வின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். பல் கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன் றியத் தலைவர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தைச் சேர்ந்த அருளன்பன், பேரா சிரியர் சிவத்தம்பி, மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலை வர் பரமநாதன், யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் ரங்கராஜா ஆகியோர் ஏற்றி வைத்த னர். தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தாயக விடுதலைப் போரில் உயிரிழந்த மாவீரர்களின தும் மக்களினதும் நினைவாக அக வணக்கப் பாடல் இசைக்கப்பட்டது. பொங்குதமிழ் சுடரை சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கண் ணன் ஏற்றி வைத்தார். பொங்கு தமிழ் பிரகடனப் பெயர்ப் பலகைக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட வணிகவியல்துறை பேராசிரியர் தேவராசா மலர்மாலை அணிவித் தார். தொடர்ந்து பொங்குதமிழ் பாடலும் இசைக்கப்பட்டது. மாவீ ரர்கள் நினைவாக நினைவுத் தூபி அமைப்பதற்கான அடிக்கல், பல் கலைக்கழக வாயிலுக்கு அருகாமை யில் நாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கைலா சபதி கலையரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தலைமை உரையை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத தலைவர் செல்வக்குமார் நிகழ்த்தி னார். தொடர்ந்து மாணவர் பேரவை உறுப்பினரின் கவிதை, பொங்கு தமிழ்ப் பிரகடன உரை ஆகியன இடம்பெற்றன.

சிறப்புரைகளை யாழ். பல்கலைக கழக துணைவேந்தர் மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நாடா ளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நேற்றைய இந்தப் பொங்குதமிழ் நிறைவு விழா நிகழ்வில் - பல் கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித நேய அமைப் புக்களின் பிரதிநிதிகள், யாழ். பல் கலைக்கழக துறைசார் தலைவர் கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், சிவாஜிலிங்கம், பத் மினி சிதம்பரநாதன், சிவனேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சூறாவளி அபாயம் தணிவு

வங்கக்கடலில் தோன்றியிருந்த தாழமுக்கம் வலுவிழந்து வருவதா கவும் இதனால் இலங்கையில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப் புக்கள் இல்லை எனவும் வளிமண் டலவியற் திணைக்களம் அறிவித் துள்ளது.

வங்கக் கடலின் தென்கிழக்குத் திசையில் தோன்றிய தாழமுக்கத் தால் சூறாவளிஅபாயம் ஏற்பட்டிருப் பதாகவும், யாழ்ப்பாணம் முதல் அம்பாந்தோட்டை வரையான பகுதி களில் அவதானமாக இருக்கும்படி யும் வளிமண்டலவியற் திணைக் களம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

எனினும், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட் டையிலும் மழைபெய்ய வாய்ப்பி ருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வட பகுதிக்கு....

யும் சந்தித்தார்.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனும் கனடியப் பிரதமர் கலந்தாலோசனை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில்....

நான் விரும்பவில்லை.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு நடவடிக்கைகள் பாதுகாப்பு தரப்பினரிடமிருந்து சிவில் அதிகாரிகள் கரங்களுக்கு விரைவில் செல்ல வேண்டும்.

விடுதலைப்புலிகள் அரசாங்கத் துடன் இணைந்து உதவிப் பணிக ளில் ஈடுபடுவது சாதகமான சமிக் ஞையாகும். அதேநேரம், சகல தரப் பினருக்கும் இந்த உதவிகள் சென் றடைய வேண்டும்.

அமெரிக்காவைத் தவிர வேறும் 14 நாடுகள் தமது படைகளையும், உபகரணங்களையும் மீட்பு நட வடிக்கைகளுக்காக இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளன. இந்தியா வும் தனது மிகப்பெரிய படையை அனுப்பியுள்ளதெனவும் அவர் தெரி வித்தார்.

## சமாதான.....

ளுக்கு சகல உதவிகளையும் கனடா வழங்கும். எமது அரசாங்கம் மனிதாபிமான உதவிகளுடன் மேலும் பல்வேறு உதவிகளையும் வழங் கும்.

சம்பந்தப்பட்ட சகலரும் கட்சி பேதங்களை மறந்து, நாட்டை மீளக் கட்டி எழுப்பும் முயற்சிகளுக்கு ஒன்றுபட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுட னான சந்திப்பின் போது நிவாரண நடவடிக்கையுடன், முன் சொன்ன அம்சத்தையும் வலியுறுத்திக் கூறி உள்ளேன். சமாதானத்தை பேச்சு வார்ததை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பென எந்த ஒரு நாடும் கூற வில்லை. இலங்கையின் சமாதானம் தொடர்பாக கனடா கூடிய கவனம் செலுத்தும்.

இலங்கையில் கரையோரப்பகு திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளன. எமது உதவிகள் இலங்கை யின் சகல பகுதிக்கும் பகிர்ந்தளிக் கப்படுவதையே நாம் விரும்புகின் றோம் எனத் தெரிவித்தார்.

# தாயக மீள்கட்டுமானம் தொடர்பாக...

தேசியத் தலைவர் வே.பிரபா கரன் தனது உரையில் - அழிவுக ளும் இழப்புக்களும் எமது மக்க ளுக்கு பரிச்சயப்பட்டுப்போனவை. எனினும், சுனாமியால் ஏற்பட்ட அதி கமான உயிரிழப்பும், இடப்பெயர் வும் - இயற்கையின் சீற்றத்தால் மிகவும் குறுகிய நேரத்தில் நிகழ்ந்தது என்ற வகையில் அதிர்ச் சியானதொன்றாக உள்ளது.

கடந்த காலத்தில் இராணுவத் தின் நடவடிக்கைகளாலும், தந்தி ரோபாயங்களாலும் எமது மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு இடம் பெயரவும், சொத்துக்களை இழக்க வும் நேரிட்டது. இது சர்வதேசம் அறியப்படாமல் மௌனமாக எமது மக்களையும் தேசத்தையும் சிதைத்த முதலாவது சுனாமியாகக் காணப் படும் நிலையில் - 26 ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் எமது மக்களைப் பொறுத்தவரை இடண்டாவது சுனாமியே.

யுத்த காலத்தின்போதும், நெருக்கடியின்போதும் எம்மைப் பாதுகாத்த மக்கள் சுனாமி அனர்த் தத்தால் துயரத்துக்கு உள்ளான போது எமது இயக்கத்தின் வளங் கள் யாவும் உடனடியாக மக்களுக் காகவே திருப்பப்பட்டு அவர்களது மீட்பு மற்றும் துயர்துடைப்புப் பணி கள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது எங்கள் முன்னுள்ள சவால் - எமது மக்களின் துயர் களைத் துடைப்பதும், அவர்க ளைத் துரிதகதியில் இயல்பு வாழ் வுக்கு இட்டுச்செல்வதன்மூலம் மக்கள் அடைந்துள்ள அதிர்ச்சியி லிருந்து விடுவிப்பதுமே ஆகும். அதிலும் குறிப்பாக எமது குழந்தை கள், இளம் சிறார்கள் ஆகியோர் மிக மோசமான அதிர்ச்சிக்குள்ளா கியுள்ளனர். இந்த அனர்த்தத்தின் பின் அவர்களது உளநலத்தில் கூடிய அக்கறைகொள்ளவேண்டி யது எம்முடைய முன்னுரிமையாக வுள்ளது.

மரபு ரீதியான அணுகுமுறை களைவிடுத்து எமது குழந்தை களை விரைவாக மகிழ்ச்சிகரமான எதிர்காலத்துக்கு இட்டுச்செல்லக் கூடிய புறச்சூழ்நிலையை ஏற்படுத் திக் கொடுக்கவேண்டியுள்ளது. விளையாட்டு மைதானங்கள், மகிழ்ச்சிகரமான பாடசாலை சூழல் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் அவர்கள் அடைந்த அதிர்ச்சி அனுபவத்திலிருந்து அவர்களை விடுவிக்கமுடியும்.

யுத்தத்தின்போதும், யுத்தம் சார்ந்த இலங்கை அரசின் நெருக்க டிகளாலும் கடற்தொழில் வாய்ப்புக் களை இழந்துபோன எமது மக்க ளின் சமூக, பொருளாதார நிலைமை தற்போது நிலவும் யுத்தமற்ற காலத்தில் ஓரளவுக்கு முன்னோக்கி நகரமுற்பட்டாலும் அதுவும் தற் போது இழக்கப்பட்ட வாய்ப்பாக மாறிவிட்டது.

இந்த நிலையில் கடந்த காலத் தில் எமது அமைப்பினால் மக்க ளின் பொருளாதார மேம்பாட்டுக் கென வழங்கப்பட்ட அனைத்து சமூக மேம்பாட்டுக் கடன்களையும் உட னடியாக இரத்துச் செய்வதாகத் தீர்மானித்துள்ளோம். அதேவேளை அவர்களுடைய வாழ்க்கையில் விரைவாக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான துரிதப்படுத்தப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளுமாறு நான் உங்களையும், புலம்பெயர் நாடுகளில் வாழும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கடற்தொழில் உபகர ணங்கள் மற்றும் வருமான ஊக்கு விப்புத் திட்டங்களை வழங்குதல் மற்றும் தனிப்பட்ட முறையிலும் நிறுவன ரீதியாகவும் உடனடியாக முன்னெடுப்பதன்மூலம் எதிர்பார்க் கப்படும் சர்வதேச உதவிகள் வரும்வரை காத்திராமல் எமது மக் களின் வாழ்க்கையில் எங்களால் நம்பிக்கையை ஏற்படுத்தமுடியும் என்பதில் நாம் உறுதியாக உள் ளோம்.

எமது மக்கள் இந்த அனர்த் தத்தின் பின் நிவாரணங்களில் தங்கி வாழும் ஒரு சமூகமாக மாற்றப்படா மல் நம்பிக்கையுடனும், உறுதியுட னும் தங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பக்கூடிய திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கடைப்பிடிக்கப்படும் கல்விமுறைமை தேசத்திற்கான தோ அல்லது வாழ்க்கைக்கான கல்வியாகவோ அமையாமல் ஓர் குறிப்பிட்ட உத்தியோகம் நோக்கிய கல்வியாக அமைவது சிதைவு களில் இருந்து மீளெழும்பும் சமூ கத்திற்குப் பொருத்தமற்ற அணுகு முறையாகவே உள்ளது. எனவே, கூடிய கவனத்தை இளஞ்சமூகத் தின் தொழிற்திறன் மேம்பாடு நோக் கியும் திசைதிருப்ப வேண்டியுள்ளது.

நாங்கள் எதிர் நோக்கியுள்ள பாரியளவு கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்குப் பொருத்தமான தொழில் நுட்பத்தை உடனடியாக உட்கொண்டுவர வேண்டியிருப்ப தோடு, அவற்றை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் எமது மனிதவளம் பயிற்றுவிக்கப் படவேண்டியுள்ளது. அதற்கேற்ற முறையில் விரைவாக தொழிற் திறன் பயிற்சிநெறிகள் அடையா ளம் கண்டு ஆரம்பிக்கப்பட வேண் டும்.

புனரமைப்பும், அபிவிருத்தியும் பாரியளவில் முன்னெடுக்கப்படும் தேசத்தில் எதிர்நோக்கப்படும் மற்றுமோர் சவால் இயற்கை வளங் களை எவ்வாறு சிறப்பானமுறை யில் பயன்படுத்துவதென்பதாகும்.

எமது மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை வளங்களை அதன் நீடித்த பயன் பாட்டிற்கு பங்கம்வராமல் பயன் படுத்துவதோடு மாற்று வளங்களை யும் பொருத்தமான தொழில் நுட் பங்களையும் அடையாளம் கண்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வருவ தன் மூலம் இயற்கை வளங்களை எமது எதிர்கால சந்ததியினருக்கு சேதமற்ற முறையில் கையளிக்க முடியும்.

கரையோரங்கள் இயற்கை அனர்த்தங்களின் இலக்குகளாக இருப்பதனால் அவற்றின் பாது காப்பும், வளப்படுத்தலும் மிகமுக்கி யமான விடயமாக கவனத்தில் கொள்ளப்பட்டு சூழல் மேம்பாட்டுத் திட்டங்கள் உடனடியாக அமுல் படுத்தப்பட வேண்டும் என வலியு றுத்தினார்.

இந்த கலந்துரையாடலின்போது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரம், சுற்றுப்புறச் சூழல், குடிநீர் ஆகியவற்றின் முக்கி யத்துவம் பற்றி வலியுறுத்திய தேசியத் தலைவர் எந்தவொரு சூழ லிலும் மக்கள் சுகாதார ரீதியான சீர்கேடுகளுக்கோ தொற்றுநோய் களுக்கோ உள்ளாகாமல் நிலை மையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத் திருந்தமைக்காக அனைத்து வைத் தியர்களுக்கும், விடுதலைப் புலி களின் மருத்துவ பிரிவினருக்கும், சுகாதார சேவையினருக்கும் தனது பாராட்டைத் தெரிவித்ததோடு தொடர்ச்சியாக அந்நிலையைப் பேணுமாறும் கேட்டுக்கொண்டார்.

## மேலும் இரு இளைஞர்களை...

ஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை உயிரி ழந்த தனுஷனும் தாமும், அவரது பெற்றோரை கனடாவிற்கு அழைப் பது தொடர்பாக கனடிய குடிவரவு அதிகாரிகளுடன் கலந்துரையாட இருந்ததாக தனுஷனின் மாமனார் சின்னத்துரை கதிர்காமநாதன் மற்றும் அவரது நண்பரான லோஜன் - சிறியானந்தன் ஆகிய இருவரும் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கொலையுடன் தொடர்பு டைய இரண்டு சந்தேக நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள் ளதாகவும், இந்தக் கொலையுடன் வேறும் யாராவது சம்பந்தப்பட்டி ருக்கிறார்களா என்பது தொடர்பாக தாம் ஆராய்ந்து வருவதாகவும் பொலிஸ் அதிகாரி றெஜ் பிட்ஸ் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மேற்கிந்தியர்களுக்கு சொந்தமான வியாபார நிலையத்தில் வேலை செய்து கொண்டிருந்த தனுஷன் ஜெயக்குமாரை அங்கு வந்த சிலர் கடத்திச் சென்று குத்திக் கொலை செய்தனர். இவரது உடல் பூங்கா ஒன்றிலிருந்து மீட்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

ரொரன்ரோவில் இலங்கையர் ஒருவரின் முதலாவது கொலைச் சம்பவம் இதுவெனத் தெரிவித்த பொலிஸார், இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் குறித்த தக வல்களை அறிந்தால் தமக்கு அறி விக்குமாறும் தெரிவித்துள்ளனர்.




பிற்போடப்பட்டுள்ளது

விசுவமடு சிறி முத்துமாரி அம்மன் ஆலய கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு கடந்த பொங்கல் அன்று குலுக்க இருந்தது. இது தவிர்க்கமுடியாத காரணத்தால் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டுக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

நன்றி.

ஆலய நிர்வாகத் தலைவர்
பொன்சிவாஸ்

செயலாளர்
கு.மோகனமங்களகுமார்

(3615)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.